ISSN: 2582-5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




புதன் ❖ மார்ச். 06, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 148 ❖ ரூ.10

## சத்தமின்றி பூமி பூஜையுடன் தொடங்கிய மதுரை எய்ம்ஸ் பணிகள்

# சர்ச்சை

## கடந்த மக்களவைத் தேர்தல் நேரத்தில் அடிக்கல் நாட்டிய மோடி, தற்போது ஐந்து ஆண்டு கழித்து இந்த மக்களவைத் தேர்தல் வருகிறபோது பூமி பூஜை போட்டுள்ளார்; எம்.பி மாணிக்கம் தாகூர்

மதுரை , மார். 6-

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டி 5 ஆண்டுகள் நிறைவு பெற்றநிலையில், நேற்று (மார்ச்5) சத்தமில்லாமல் பூமி பூஜை நடந்து கட்டுமானப் பணிகள் தொடங்கியுள்ளது. ஆனால், மக்கள் பிரதிநிதிகள் யாரையும் அழைக்காமல் நிகழ்ச்சியை நடத்தியது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.



மதுரை தோப்பூரில் 222 ஏக்கரில் 'எய்ம்ஸ்' மருத்துவமனை அமைப்பதற்கு மத்திய அரசு கடந்த 2018 டிசம்பரில் ஒப்புதல் அளித்து, 2019 ஜனவரியில் பிரதமர் மோடியால் அடிக்கல் நாட்டப்பட்டது. நாடு முழுவதும் மற்ற எய்ம்ஸ் மருத்துவமனைகளுக்கு நேரடியாக நிதி ஒதுக்கிய நிலையில் மதுரை 'எய்ம்ஸ்' மருத்துவமனைக்கு மட்டும் ஜப்பான் பன்னாட்டு நிதி நிறுவனமான ஜைக்காவிடம் கடன் பெறுவதற்கான ஒப்பந்தம் போடப்பட்டது.

மத்திய அரசு நேரடியாக நிதி ஒதுக்கிய பிற 'எய்ம்ஸ்' மருத்துவமனைகளை சமீபத்தில் பிரதமர் மோடி திறந்துவைத்தார். ஆனால், ஜைக்கா நிறுவனம் கடன் வழங்கும் மதுரை 'எய்ம்ஸ்' மருத்துவமனை கட்டுமானப்பணி தொடங்கவில்லை. அதனால், 'எய்ம்ஸ்' மருத்துவமனைக்கான திட்ட மதிப்பீடு பல முறை உயர்ந்து, தற்போது கட்டுமானப் பணிக்கு ரூ.1977.8 கோடி திட்ட மதிப்பீடு தயாராகி உள்ளது. அதில் 82 சதவீதம் தொகையான ரூ1627.70 கோடிகளை ஜைக்கா நிறுவனம் மூலம் கடனாக பெறப்படும் எனவும், மீதமுள்ள தொகையை மத்திய அரசு வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மக்களவைத் தேர்தலுக்கு சில மாதம் முன்தான், பிரதமர் மோடி, மதுரை 'எய்ம்ஸ்' மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டிசென்றார். தற்போது அடுத்த மக்களவைத் தேர்தலே வந்துவிட்ட நிலையில் கடந்த 17 ஆகஸ்ட் 2023 அன்று மருத்துவமனை கட்டுமானத்துக்கான டெண்டர் அறிவிப்பை எய்ம்ஸ் நிர்வாகம் வெளியிட்டது. தற்போது பிரதமர் மோடி அடிக்கல் நாட்டி ஐந்து ஆண்டு நிறைவு பெற்றநிலையில், சமீபத்தில் மதுரைக்கு அவர் வந்த நிலையில் 'எய்ம்ஸ்' மருத்துவமனையை சுட்டிக்காட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின், மற்ற எதிர்கட்சிகள் மத்திய அரசு மீது குற்றம்சாட்டினர். விரைவில் மக்களவைத் தேர்தல் வரும்நிலையில், திமுக மற்றும் கட்சிகளின் விமர்சனம் அக்கட்சிக்கு நெருக்கடியை ஏற்படுத்தியது.

அதனால், கடந்த சில நாட்களுக்கு முன் தோப்பூரில் மருத்துவமனை கட்டுமானத்திற்கான டெண்டர் இறுதி செய்யப்பட்டு மத்திய சுகாதாரத் துறை அமைச்சகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. தற்போது அத்துறை ஒப்புதல் கிடைக்கப்பெற்ற நிலையில், டெண்டர் எடுத்த எல்அன்ட்டி நிறுவனம், தோப்பூரில் சத்தமில்லாமல் 'எய்ம்ஸ்' மருத்துவமனைக்கான பூமிபூஜையை நேற்று நடத்தியது. உடனடியாக நிலத்தை சமப்படுத்தி கட்டுமானத்தை தொடங்குவதற்கான பணிகள் தொடங்கியது. 'எய்ம்ஸ்' நிர்வாக இயக்குநர் நிர்வாக இயக்குநர் ஹனுமந்தராவ் மற்றும் சில மத்திய அரசு அதிகாரிகள் மட்டும் பங்கேற்றனர்.

கடந்த 2015-ம் ஆண்டு 'எய்ம்ஸ்' மருத்துவமனை தமிழகத்துக்கு அறிவித்தது முதல் தற்போது வரை பல்வேறு சர்ச்சைகள் எழுந்துவந்த நிலையில் கட்டுமானப் பணிகள் நேற்று தொடங்கியது தென்மாவட்ட மக்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், அதேநேரத்தில் உள்ளூர் எம்பி, அமைச்சர்கள், எம்எல்ஏக்கள், ஆட்சியர் யாரையும் அழைக்காமல் பூமி பூஜையை நடத்தியது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

**ரகசியதிட்டமா 'எய்ம்ஸ்'?- மதுரை எம்.பி சு.வெங்கடேசன்**

''ஒரு ரகசிய திட்டத்தைப்போல் மதுரை 'எய்ம்ஸ்' கட்டுமானப்பணி தொடங்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் எந்த நேரத்தில் தொடங்கி எந்தெந்த நேரத்தில் முடிக்கப்படும் என்ற விவரங்கள் (construction bar chart) கேட்டிருந்தோம். கண்டிப்பாக அந்த பட்டியிலில் தற்போது கட்டுமானப்பணி தொடங்குவதற்கான தேதி இருக்காது. உறுதியாக தேர்தலுக்கு பிந்தைய நாளாகதான் இருக்கக்கூடும்.

தற்போது தேர்தலுக்காக மக்களையும், மக்கள் பிரதிநிதிகளையும் ஏமாற்றுவதற்காக தேர்தல் நேரத்தில் பூமி பூஜை போட்டு கட்டுமானப் பணியை தொடங்குவதாக நாடகமாடுகின்றனர். அப்படியென்றால் கடந்த வாரம் மதுரைக்கு வந்த பிரதமர் மோடியை வைத்து தொடங்கி இருக்கலாமே?" என்றார்.

**தொகுதி எம்.பி கவலை:** காங்கிரஸ் எம்.பி மாணிக்கம் தாகூர் கூறுகையில்,"என்னுடைய விருதுநகர் மக்களவைத் தொகுதிக்குட்பட்ட மதுரை மாவட்டம் தோப்பூரில்தான் 'எய்ம்ஸ்' மருத்துவமனை வருகிறது. ஆனால், தொகுதி எம்.பியான என்னை யாரும் 'எய்ம்ஸ்' பூமி பூஜை நிகழ்ச்சிக்கு அழைக்கவில்லை. நான் உள்ளூரில்தான் இருந்தேன்.

கடந்த மக்களவைத் தேர்தல் நேரத்தில் அடிக்கல் நாட்டிய மோடி, தற்போது ஐந்து ஆண்டு கழித்து இந்த மக்களவைத் தேர்தல் வருகிறபோது பூமி பூஜை போட்டுள்ளார். அந்த இடத்தில் தற்போது வெறும் செங்கலை தவிர மற்ற எந்த கட்டுமானப் பணியும் நடக்கவில்லை. ஆனால், மதுரையுடன் அறிவித்த நாட்டின் பிற 'எய்ம்ஸ்' மருத்துவமனைகள் திறப்பு விழா கண்டுள்ளன.

தோப்பூருக்கு 3 கி.மீ., தொலைவில் உள்ள தாஜ் ஹோட்டலில் மதுரைக்கு சமீபத்தில் வந்த மோடி தங்கியிருந்தார். அப்போது அவர் தேர்தலுக்காக பூமி பூஜை நடத்தி கட்டுமானப் பணிகள் நடப்பதுபோன்ற தோற்றத்தை உருவாக்க திட்டம்போட்டிருக்கலாம். என்றார்.



▶ புதுக்கோட்டை மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி 144வது ஆண்டு விழாவில் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார். உடன் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் மெர்சி ரம்யா மற்றும் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் முத்துராஜ் மற்றும் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழகத் துணைச் செயலாளர் மதியழகன், பேராசிரியர் பெருமக்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

## "நம் இளைஞர்கள் 'ஜெய் ஸ்ரீராம்' கோஷமிட்டு பட்டினியால் சாக பிரதமர் மோடி விரும்புகிறார்" – ராகுல் காந்தி

ஷாஜபூர் : மார். 6-

"நம் இளைஞர்கள் ஜெய் ஸ்ரீராம் என கோஷமிட்டுக் கொண்டு கடைசி வரை பட்டினியாகக் கிடந்து உயிர்விட வேண்டும் என்பதே பிரதமர் மோடியின் விருப்பம்" என காங்கிரஸ் எம்பி ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.



இந்திய ஒற்றுமை நீதி யாத்திரை மேற்கொண்டு வரும் ராகுல் காந்தி, மத்தியப் பிரதேசத்தின் ஷாஜபூரில் தொண்டர்கள் மத்தியில் உரையாற்றினார். அப்போது, "காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் நாடு தழுவிய அளவில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும். சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதன் மூலம்தான் மக்களுக்கு சமூக நீதியை வழங்க முடியும். சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவது என்பது புரட்சிகரமான நடவடிக்கை. காங்கிரஸ் எப்போதுமே புரட்சிகரமான நடவடிக்கைகளை மட்டுமே எடுக்கும்.

நாட்டின் சுதந்திரத்துக்காக காங்கிரஸ் போராடியது. அப்போது அவர்கள் (பாஜக) எங்கே இருந்தார்கள்? பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி, டிஜிட்டல் புரட்சி என அனைத்து புரட்சிகளையும் செய்தது காங்கிரஸ். ஆனால், நமது இளைஞர்கள் 'ஜெய் ஸ்ரீராம்' என கோஷமிட்டுக் கொண்டு கடைசி வரை பட்டினியாகக் கிடந்து உயிர்விட வேண்டும் என்பதே பிரதமர் மோடியின் விருப்பம்.

நமது ராணுவத்தில் இளைஞர்களுக்கு பல்வேறு உத்தரவாதங்கள் இருந்தன. அவர்களுக்கு ஓய்வூதியம் இருந்தது. ஒருவேளை அவர்கள் இறக்க நேர்ந்தால் அவர்களுக்கு மரியாதை இருந்தது. தற்போது அக்னிவீர் திட்டத்தை அமல்படுத்துகிறார்கள். இந்தத் திட்டத்தின் கீழ் 4 பேரை பணிக்கு எடுத்தால், 3 பேரை வெளியேற்றிவிடுவார்கள். அந்த மூன்று பேர் எஸ்.சி, எஸ்.டி, ஓபிசி சமூகத்தைச் சேர்ந்தர்களாக இருக்கலாம்" என ராகுல் காந்தி பேசினார்.



▶ புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், திருநாளூர் ஊராட்சி, பேராட்சி குடியிருப்பு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றியினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார். உடன் அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் சிவக்குமார், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், ஒன்றியக் குழு உறுப்பினர் சுமதி மெய்யநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## "ஊழல்வாதிகளை பாஜகவில் சேர்ந்ததும் அஸ்ஸாமிலும், மகாராஷ்டிராவிலும் முதல்வராக்கியவர் பிரதமர் மோடி" : அமைச்சர் மனோ தங்கராஜ் காட்டம்

சென்னை : மார். 6-

மோடியாலேயே ஊழல்வாதிகள் என குற்றம் சாட்டபட்டவர்கள் பாஜகவில் சேர்ந்ததும் அஸ்ஸாமிலும், மகாராஷ்டிராவிலும் முதல்வராக்கப்பட்டனர் என்று அமைச்சர் மனோ தங்கராஜ் விமர்சித்துள்ளார்.



இது தொடர்பாக அமைச்சர் மனோ தங்கராஜ் தனது சமூகவலைத்தள பக்கத்தில்,"2015ல் சென்னை வெள்ளத்தில் தத்தளித்த போது, விமானத்தில் இருந்து பார்வையிடுவதுபோன்ற போட்டோஷாப் செய்த படத்தைதனது டிவிட்டர் கணக்கில் பகிர்ந்து, கடும் கண்டனங்களுக்கு பிறகு நீக்கிய மோடி வெள்ளத்தின் போது 24 மணி நேரமும் உழைத்த திமுகவை பார்த்து ஊடக பிரச்சாரத்தில் மட்டும் கவனம் செலுத்தியதாக குற்றம் சாட்டுகிறார்.

2014ல் தேர்தலுக்கு முன்பு "சுவிஸ் வங்கியிலிருக்கும் கருப்பு பணத்தை கொண்டுவந்து மக்களின் வங்கி கணக்குகளில் போடுவேன்" என்று சொன்ன மோடி ஆட்சியில் பெரும் பணக்காரர்கள் வங்கியில் பல்லாயிரம் கோடி கடன் வாங்கி, எந்த சிரமமும் இன்றி நாட்டைவிட்டு தப்பி செல்ல உதவியதே அவரது சாதனை. Panama Papers, Pandora Papers போன்றவற்றில் நம் நாட்டு பிரபலங்கள் சட்டத்துக்கு புறம்பாக, அயல்நாடுகளில்சொத்து சேர்த்துள்ளதாக வந்த குற்றச்சாட்டுகளுக்கு எந்த நடவடிக்கையும் இல்லை. லோக்பால் சட்டத்தால் உருவான அமைப்பு கடந்த பத்து ஆண்டுகளில் இன்று வரை ஒரு வழக்கில் கூட குற்றத்தை நிருபிக்கவில்லை. மோடியாலேயே ஊழல் வாதிகள் என குற்றம் சாட்டபட்டவர்கள் பிஜேபி-ல் சேர்ந்ததும் அஸ்ஸாமிலும், மகாராஷ்டிராவிலும் முதல்வராக்கப்பட்டனர்.

இப்படி ஒரு ஊழல் "ஒழிப்பு" சாதனை வரலாற்றை வைத்திருக்கும் மோடி திமுகவை நோக்கி "ஊழல்வாதிகள்" என்று கூறவதை பார்த்து சிரிக்கத்தான் வேண்டும். மத்திய அரசு நிதி தராத போதும் மாநில அரசு மக்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்ததை கூட மோடி அறியவில்லையா? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

## "எங்கள் மீதுள்ள கரிசனத்துக்கும், அக்கறைக்கும் நன்றி, திமுக கூட்டணியே உறுதி" – அதிமுகவுக்கு திருமாவளவன் பதில்

சென்னை, மார். 6-

"எங்கள் மீதுள்ள கரிசனத்துக்கும், அக்கறைக்கும் ஜெயக்குமாருக்கும், அதிமுகவுக்கும் விசிக சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எங்களைப் பொறுத்தவரை இந்தத் தேர்தலில் பாஜகவை வீழ்த்துவதுதான் முதன்மையானது" என்று அதிமுகவின் கூட்டணி அழைப்புக்கு திருமாவளவன் பதில் கூறியுள்ளார்.



விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அக்கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன், "மக்களவைத் தேர்தலில் ஆந்திரா, கர்நாடகா, தெலங்கானா மற்றும் கேரளா ஆகிய தென்னிந்திய மாநிலங்களிலும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி போட்டியிடும். அதன்படி, தெலங்கானாவில் 10 தொகுதிகளில் போட்டியிட உள்ளோம்.

ஆந்திராவில் இந்தியா கூட்டணியை வழிநடத்தும் காங்கிரஸோடு பேச்சுவார்த்தை நடந்துவருகிறது. கர்நாடகாவில் விசிக ஆறு இடங்களில் போட்டியிடவுள்ளது. கேரளாவில் இடுக்கி உட்பட மூன்று தொகுதிகளில் போட்டியிடுகிறோம். இந்தியா கூட்டணியில் நாங்கள் அங்கம் வகிப்பதனால், ஆந்திரா உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களில் எங்கள் வேட்பாளர்களால் பாஜக வேட்பாளர்கள் பயன்பெறக்கூடிய வகையில் வாக்குபிளவு நேர்ந்துவிட கூடாது என்பதில் கவனம் செலுத்துகிறோம். ஆந்திராவில் கூட்டணியில் வாய்ப்பளித்தால் கூட்டணியில் இணைந்து போட்டி. இல்லையேல் விசிக தனித்து போட்டியிடும்.

தொகுதிப் பங்கீட்டில் இன்னும் திமுகவிடம் இருந்து அதிகாரபூர்வ அழைப்பு வரவில்லை. அழைப்பு விடுத்தும் உடனடியாக பேசுவோம். வாய்ப்பு இருந்தால் முதல்வரை சிந்திப்போம். தொகுதிப்பங்கீட்டில் முதல்கட்ட பேச்சுவார்த்தை தான் முடிந்துள்ளது. அடுத்தகட்ட பேச்சுவார்த்தை இன்னும் தொடங்கவில்லை. முதல்கட்ட பேச்சுவார்த்தையில் நாங்கள் விடுத்த கோரிக்கை அப்படியே உள்ளது. இரண்டாம்கட்ட பேச்சுவார்த்தையில் தான் சூழலுக்கு ஏற்ப எங்கள் முடிவுகளை எடுப்போம்.

எங்களின் பலம் குறித்து நாங்கள்தான் மதிப்பீடு செய்ய முடியும். எங்கள் பலம் எங்களுக்கு தெரியும் என்கிற நம்பிக்கையில் தான் எங்கள் கோரிக்கையும் முன்வைக்கிறோம்.

எங்கள் மீதுள்ள கரிசனத்துக்கும், அக்கறைக்கும் ஜெயக்குமாருக்கும், அதிமுகவுக்கும் விசிக சார்பில் நன்றியை தெரிவித்து கொள்கிறேன். எங்களை பொறுத்தவரை இந்த தேர்தலில் பாஜகவை வீழ்த்துவது தான் முதன்மையானது. தனிப்பட்ட விருப்பு,வெறுப்பு அடிப்படையில் ஒரு முடிவை எடுக்க முயற்சிக்கப்போவதில்லை. நாட்டு நலன் கருதி, மக்கள் நலன் கருதி இந்தத் தேர்தலை கருத்தியல் போராக அணுகுகிற காரணத்தினால் திமுக கூட்டணியில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் பயணித்து வருகிறோம். அந்த நிலைப்பாட்டில் இருந்து நாங்கள் மாறப்போவதில்லை.

போட்டியிடக் கூடிய தொகுதிகளின் எண்ணிக்கை நாங்கள் விரும்பியதுபோலவோ அல்லது விருப்பத்துக்கு மாறாகவோ இருக்கலாம். ஆனால், எங்களின் விருப்பதை விட பாஜகவிடம் இருந்து நாட்டை காப்பாற்ற வேண்டும். அந்த அடிப்படையில் திமுக கூட்டணி என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறோம்" என்று திருமாவளவன் கூறினார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

வாழ்க்கையில்
எல்லாவற்றையும்
செய்துமுடிக்க
வேண்டும் என்று
நினைப்பவன்
எதையுமே செய்து
முடிக்க மாட்டான்.






### மண்டைக்காடு பகவதியம்மன் கோயில் கொடை விழா

## கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மார்ச் 12ம் தேதி உள்ளூர் விடுமுறை – மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

குமரி : மார். 6–

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மார்ச் 12ம் தேதி உள்ளூர் விடுமுறை அளித்து ஆட்சியர் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். மண்டைக்காடு பகவதியம்மன் கோயில் கொடை விழாவை ஒட்டி கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.



பெண்களின் சபரிமலை என்று அழைக்கப்படும் கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு பகவதி அம்மன் கோயில், மாசித் திருவிழா கடந்த 3ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. 10 நாட்கள் திருவிழா நடைபெற உள்ளது. கேரள மாநில பெண்கள் இருமுடி கட்டிக்கொண்டு இக்கோயிலுக்கு வந்து இங்குள்ள பகவதியம்மனை வழிபடுவதால் இக்கோயில் பெண்களின் சபரிமலை என்று போற்றப்படுகிறது.


இத்திருவிழாவை முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்டத்துக்கு மார்ச் 12-ல் விடுமுறை அறிவித்து மவ்ற ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார். மண்டைக்காடு பகவதியம்மன் கோயில் மாசிக் கொடைவிழாவை முன்னிட்டு மார்ச் 12ஆம் தேதி கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு உள்ளூர் விடுமுறை என அறிவிக்கப்பட்டுள்ளது. மார்ச் 12-ஆம் தேதி விடப்படும் உள்ளூர் விடுமுறைக்கு ஈடாக ஏப்ரல் 6ஆம் தேதி பணி நாளாக கடைபிடிக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் பி.என்.ஸ்ரீதர் அறிவித்துள்ளார்.

## ஜெயலலிதாவின் 17 கிலோ தங்கம், 7 கிலோ வெள்ளி நகைகளை தமிழ்நாடு அரசிடம் ஒப்படைக்க இடைக்கால தடை : கர்நாடக உயர்நீதிமன்றம்

பெங்களூரு : மார். 6–

ஜெயலலிதா நகைகளை தமிழ்நாடு அரசிடம் ஒப்படைக்கும் சிறப்பு நீதிமன்ற தீர்ப்புக்கு கர்நாடக ஐகோர்ட் தற்காலிக தடை விதித்தது.

கடந்த 1991- 96ம் ஆண்டு வரை தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா மீது வருமானத்திற்கு அதிகமாக ரூ.66 கோடி சொத்துக்குவித்ததாக வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கு விசாரணையின்போது தமிழக லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸார் ஜெயலலிதாவின் இல்லத்தில் நடத்திய சோதனையில் தங்க, வைர நகைகள், வெள்ளிப் பொருட்கள், ரத்தின கற்கள், கைக்கடிகாரங்கள் உட்பட என ஏராளமான பொருட்களை பறிமுதல் செய்தனர்.



இதனிடையே பெங்களூருவைச் சேர்ந்த சமூக ஆர்வலர் நரசிம்மமூர்த்தி கடந்த ஆண்டு பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தொடர்ந்தார். அதில், கர்நாடக அரசின் கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ள ஜெயலலிதாவின் பொருட்களை ஏலம் விட வேண்டும். அந்த தொகையில் இவ்வழக்கிற்காக கர்நாடக அரசு செலவு செய்த பணத்தை வழங்க வேண்டும். மீதியுள்ள பணத்தை மக்களின் நலத்திட்டங்களுக்கு பயன்படுத்த வேண்டும் என கோரினார்.

இவ்வழக்கில் உத்தரவு பிறப்பித்த நீதிபதி, "ஜெயலலிதா தொடர்புடைய தங்க, வரை நகைகள் மற்றும் வெள்ளி பொருட்களை கர்நாடக அரசு தமிழக அரசிடம் ஒப்படைக்க வேண்டும். வருகிற மார்ச் 6, 7 (இன்று, நாளை) ஆகிய தேதிகளில் தமிழக அரசிடம் ஒப்படைக்க கர்நாடக உள்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வழக்கை நடத்துவதற்கு கர்நாடக அரசு செலவழித்த ரூ.5 கோடியை தமிழக அரசு செலுத்த வேண்டும்" என உத்தரவிட்டார். இதற்கிடையே ஜெயலலிதாவின் அண்ணன் மகள் ஜெ.தீபா மற்றும் அவரது சகோதரர் தீபக் ஆகியோர் தனித்தனியாக கர்நாடக உயர்நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்தனர். அதில், ஜெயலலிதாவின் பொருட்களை ஏலம் விடக்கூடாது. அவற்றை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என கோரினர்.

இந்த மனுக்கள் நேற்று நீதிபதி நவாஸ் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது ஜெயலலிதா நகைகளை தமிழ்நாடு அரசிடம் ஒப்படைக்கும் சிறப்பு நீதிமன்ற தீர்ப்புக்கு தற்காலிக தடை விதித்த நீதிபதி நவாஸ், தீபக், தீபா மனுக்களுக்கு பதிலளிக்க அரசு வழக்கறிஞர்களுக்கு உத்தரவிட்டு வழக்கு விசாரணையை மார்ச் 26ம் தேதிக்கு தள்ளி வைத்தார்.

## மக்களவை தேர்தலில் அதிமுக – புதிய தமிழகம் இடையே கூட்டணி உறுதியானது : கிருஷ்ணசாமி அறிவிப்பு



சென்னை : மார். 6–

"அதிமுக - புதிய தமிழகம் கட்சி இடையே கூட்டணி உறுதியானது" என்று புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

அதிமுக கூட்டணி பேசுவார்த்தை குழுவினர், புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். நேற்று காலை 11 மணியளவில் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள கட்சி அலுவலகத்தில் சந்திப்பு நடைபெற்றது. சந்திப்புக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய கிருஷ்ணசாமி, "அதிமுக கூட்டணியில் புதிய தமிழகம் கட்சி இடம்பெறுவது குறித்து பேச்சுவார்த்தை நடந்தது. பேச்சுவார்த்தை மிகவும் சுமுகமாக இருந்தது. 2024 மக்களவை தேர்தலில் ஒரு வெற்றிக்கூட்டணியை அமைப்பது தான் எங்களின் நோக்கம்.

அந்த அடிப்படையில் பேச்சுவார்த்தை அமைந்தது. எங்களுக்கு எத்தனை தொகுதிகள் வேண்டும் என்பது குறித்தெல்லாம் தெரிவித்தோம். அடுத்தடுத்த கட்ட பேச்சுவார்த்தையில் முடிவுகள் எடுக்கப்படும். ஒரு வலுவான கூட்டணி தமிழகத்தில் அமையும் என்கிற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அதிமுக - புதிய தமிழகம் கட்சி இடையே கூட்டணி உறுதியானது." என்று தெரிவித்தார். பின்னர் பேசிய முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, "சில கருத்துக்களை கிருஷ்ணசாமி முன்வைத்துள்ளார். அதை எடப்பாடி பழனிசாமியிடம் தெரிவிப்போம். கிருஷ்ணசாமி கூறியது போல், இபிஎஸ் தலைமையில் இக்கூட்டணி வெற்றிக் கூட்டணியாக அமையும். மக்களவை தேர்தல் மட்டுமல்ல, சட்டமன்றத் தேர்தல் வரை நீடித்து தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும்." என்று தெரிவித்தார்.

## மக்களவைத் தேர்தல் நெருங்கும் நிலையில் புதுச்சேரியில் புதிய அமைச்சராக திருமுருகன் நியமனம் : 4 மாதங்களுக்குப் பிறகு ஒப்புதல்

புதுச்சேரி : மார். 6–

மக்களவைத் தேர்தல் நெருங்கும் நிலையில் 4 மாதங்களாக காலியாக இருந்த அமைச்சர் பதவி நிரப்பப்படவுள்ளது. புதுச்சேரி அமைச்சராக திருமுருகனை நியமிக்க குடியரசுத் தலைவர் ஒப்புதல் தந்துள்ளார்.

புதுச்சேரியில் நான்கு பிராந்தியங்கள் உள்ளன. அதில் மாஹே, ஏனாமில் தலா ஒரு எம்எல்ஏக்கள் உள்ளனர். காரைக்கால் பிராந்தியத்தில் 5 எம்எல்ஏக்கள் உள்ளனர். அவர்களில் ஒருவர் சந்திர பிரியங்கா. என்.ஆர்.காங்கிரஸ் எம்எல்ஏவான இவரை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கி 4 மாதங்களாகியும், புதிய அமைச்சர் நியமிக்கப்படவில்லை. இதனால் தங்கள் பிராந்தியம் ஒதுக்கப்படுவதாக காரைக்கால் தரப்பில் இருந்து குற்றச்சாட்டு எழுந்திருந்தது. குறிப்பிட்ட அமைச்சர் நீக்கப்படும் தருணத்தில், அவர் வெளியிட்ட அறிக்கையில், 'நான் சாதி ரீதியிலும், பாலின ரீதியிலும் தாக்குதலுக்கு உள்ளாவதாக உணர்ந்தேன்' எனக் குறிப்பிட்டிருந்தார்.



சந்திர பிரியங்கா நீக்கப்பட்டதால். அவர் வகித்த துறைகளுக்கு புதிய அமைச்சர் எப்போது நியமிக்கப்படுவார் என்ற கேள்வி எழுந்தது. காரைக்கால் தரப்பில் இருந்து என்.ஆர்.காங்கிரஸுக்கு திருமுருகன், சந்திரபிரியங்கா ஆகிய இரு எம்எல்ஏக்கள் உள்ளனர். காரைக்காலுக்கு முக்கியத்துவம் கொடுக்க திருமுருகனுக்கு அமைச்சர் பதவி தரப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. அதேநேரத்தில் அக்கட்சியைச் சேர்ந்த வேறு சிலர் பட்டியலின பிரதிநிதித்துவம் அடிப்படையில் தங்களுக்கு பதவி கிடைக்கும் என்று எதிர்பார்த்து காத்திருந்தனர். ஆனால், 4 மாதங்களாக எந்த மாற்றமும் இல்லாமல் அதே நிலை தொடர்ந்தது.

மக்களவைத் தேர்தல் நெருங்கும்சூழலில்காரைக்கால் தரப்பில் இது சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. பாஜக போட்டியிடவுள்ள சூழலில் இது காரைக்காலில் வாக்குகளை பெறுவதில் சிக்கல் ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் மத்திய அரசின் உள்துறை இணைச்செயலர் அசுதோஷ் அக்னிஹோத்ரி வெளியிட்ட உத்தரவில், "புதுச்சேரி அமைச்சராக திருமுருகனை நியமிக்க குடியரசுத் தலைவர் ஒப்புதல் தந்துள்ளார். அவர் அமைச்சராக பதவியேற்ற நாள் முதல் இது அமலுக்கு வரும்" என்று தெரிவித்துள்ளார்.

அமைச்சராக இருந்த சந்திரபிரியங்கா நீக்கப்பட்ட பிறகு தேர்தல் அறிவிக்கப்படவுள்ள சூழலில் 4 மாதங்களுக்கு பிறகு காரைக்கால் பிராந்தியத்தை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் என்.ஆர்.காங்கிரஸை சேர்ந்த திருமுருகன் நியமிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. அரசு வட்டாரங்களில் விசாரித்தபோது, ஆளுநர் தமிழிசை தெலங்கானாவில் உள்ளார். அவர் புதுச்சேரி வரும் தேதியைப்பொறுத்து அமைச்சராக பொறுப்பு ஏற்கும் தேதிவிரைவில்தெரிவிக்கப்படும் என்று குறிப்பிட்டனர்.

## மாவோயிஸ்ட் தொடர்பு வழக்கில் டெல்லி பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் ஜி.என். சாய்பாபா விடுவிப்பு

நாக்பூர் : மார். 6

மாவோயிஸ்ட்கள் தொடர்பில் இருந்த வழக்கில் இருந்து டெல்லி பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் ஜி.என். சாய்பாபா மற்றும் 5 பேரை மும்பை உயர் நீதிமன்ற நாக்பூர் கிளை நேற்று விடுவித்து உத்தரவிட்டுள்ளது.

மாவோயிஸ்டுகளுடன் இணைந்து சதியில் ஈடுபட்டதாகத் தொடரப்பட்ட வழக்கில் கடந்த 2017-ம் ஆண்டு செஷன்ஸ் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து முன்னாள் பேராசிரியர் சாய்பாபா தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கில் மும்பை உயர் நீதிமன்ற கிளை இந்தத் தீர்ப்பினை வழங்கியுள்ளது. முன்னதாக, இதே வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த முன்னாள் பேராசிரியர் சாய்பாபா உள்ளிட்ட 5 பேரை, மும்பை உயர் நீதிமன்ற நாக்பூர் கிளை கடந்த 2022, அக்.14-ம் தேதி விடுவித்திருந்தது.



உயர் நீதிமன்றத்தின் உத்தரவினை எதிர்த்து மகாராஷ்டிரா அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது. வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றத்தின் உத்தரவை ரத்து செய்து, அந்த வழக்கை உயர் நீதிமன்றம் மீண்டும் புதிதாக விசாரணை செய்யவேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது.

அதன்படி வழக்கினை விசாரணை செய்த மும்பை உயர் நீதின்ற நீதிபதிகள், வினய் ஜோஷி மற்றும் வால்மீகி எஸ்.ஏ.மெனேசஸ் அடங்கிய அமர்வு "குற்றம்சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக வழக்கில் குற்றங்களை நிரூபிக்க அரசுத் தரப்பு தவறி விட்டது. சட்டப்பூர்வ மற்றும் முறையான அனுமதி இல்லாததால், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் (UAPA) கீழ் வழங்கப்பட்ட அனுமதி செல்லாது" என்று தெரிவித்தனர்.

மேலும், "நீதியின் விதிகளை மீறி கட்ச்ரோலி செஷன்ஸ் நீதிமன்றம் நடத்திய விசாரணை நீதியின் தோல்விக்குச் சமம். குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சட்டப்பூர்வமான பிடிப்பு அல்லது ஆதராங்களை நிறுவ அரசுத்தரப்புத் தவறி விட்டது. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்டத்தின் படி செல்லதக்கது இல்லை. எனவே நாங்கள் மேல்முறையீடுகளை அனுமதிக்கிறோம். மேலும் தடைசெய்யப்பட்ட தீர்ப்பினை ரத்து செய்கிறோம். குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்கிறோம்" என்று உத்தரவிட்டனர். சக்கர நாற்காலியில் வலம்வரும் 54 வயதாகும் சாய்பாபா, 99 சதவீத மாற்றுத்திறனாளியாவார். அவர் தற்போது நாக்பூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

## குஜராத் மாநில காங்கிரஸ் மூத்த தலைவர்கள் அர்ஜுன் மோத்வாடியா, அம்ப்ரிஷ் டெர் பாஜகவில் ஐக்கியம்



காந்திநகர் : மார். 6–

குஜராத் மாநில காங்கிரஸ் மூத்த தலைவர்கள் அர்ஜுன் மோத்வாடியா, அம்ப்ரிஷ் டெர் உள்ளிட்டோர் பாஜகவில் இணைந்தனர்.

குஜராத் மாநில காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும், சட்டமன்ற முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், போர்பந்தர் தொகுதி எம்எல்ஏவுமான அர்ஜுன் மோத்வாடியா, காங்கிரஸ் கட்சியின் மாநில செயல் தலைவரும் முன்னாள் எம்எல்ஏவுான அம்ப்ரிஷ் டெர் உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் பாஜகவில் இணைந்தனர். தலைநகர் காந்திநகரில் உள்ள பாஜக அலுவலகத்தில் மாநில தலைவர் சி.ஆர்.பாட்டீல் முன்னிலையில் இந்த இணைப்பு விழா நடைபெற்றது.

அம்ப்ரிஷ் டெர் கடந்த ஞாயிற்றுக்கிழமை காங்கிரஸ் கட்சியை விட்டு விலகிய நிலையில், அர்ஜுன் மோத்வாடியா நேற்று முந்தினம் திங்கள்கிழமை விலகினார். அயோத்தியில் கட்டப்பட்டுள்ள ராமர் கோயில் திறப்பு விழாவை காங்கிரஸ் கட்சி புறக்கணித்ததையும், காங்கிரஸ் தலைவர்கள் அயோத்திராமர் கோயிலுக்குச் செல்லாததையும் காரணம் காட்டி இருவரும் கட்சிப் பொறுப்புகளில் இருந்து விலகினர்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு அர்ஜுன் மோத்வாடியா எழுதிய கடிதத்தில், "அயோத்தி ராமர் கோயில் பிராண பிரதிஷ்டை விழாவில் பங்கேற்பது இல்லை என்ற முடிவை காங்கிரஸ் கட்சி எடுத்தபோது நான் எனது அதிருப்தியை வெளிப்படுத்தி இருந்தேன். அதை தாங்கள் அறிவீர்கள். ராமர் இந்துக்களின் வழிபடும் கடவுள் மட்டுமல்ல; அவர் நமது நாட்டின் ஆன்மாவாக இருக்கிறார். பிராண பிரதிஷ்டை விழாவில் பங்கேற்பது இல்லை என்ற முடிவின் மூலம் காங்கிரஸ் கட்சி இந்திய மக்களின் உணர்வுகளை காயப்படுத்தியது.

அதோடு, மக்களின் உணர்வுகளை கணிப்பதில் காங்கிரஸ் கட்சி தோல்வி அடைந்துவிட்டது. அயோத்தி ராம ஜென்ம பூமி பிராண பிரதிஷ்டை விழாவில் பங்கேற்காததன் மூலம் காங்கிரஸ் மிகப் பெரிய தவறிழைத்துவிட்டது என நான் சந்தித்த பலரும் குற்றம் சாட்டினார்கள். பிராண பிரதிஷ்டை நடந்த சமயத்தில், அசாமில் ராகுல் காந்தி போராட்டத்தில் ஈடுபட்டது மக்களை மேலும் காயப்படுத்துவதாக இருந்தது" என குறிப்பிட்டிருந்தார்.

மக்களவைத் தேர்தல் நெருங்கும் நிலையில், அம்பரிஷ் தெர் மற்றும் அர்ஜுன் மோத்வாடியா காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி, பாஜகவில் இணைந்திருப்பது அக்கட்சிக்கு பெரும் பின்னடைவாக இருக்கும் என கருதப்படுகிறது.

## மக்களவைத் தேர்தலில் காங்கிரஸுக்கு நெல்லையை ஒதுக்க வேண்டும் : திமுகவை வலியுறுத்தி தீர்மானம்

திருநெல்வேலி : மார். 6–

திமுக கூட்டணியில் திருநெல்வேலி தொகுதியை காங்கிரஸுக்கு ஒதுக்க வேண்டும் என்று வலியுறுத்தி, காங்கிரஸ் நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் திருநெல்வேலி கிழக்கு, மாநகர் மாவட்டம் மற்றும் தென்காசி மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் திருநெல்வேலி அருகே செங்குளத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாநிலத் தலைவர் செல்வப் பெருந்தகை தலைமை வகித்தார். 'மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் ராகுல் காந்தி போட்டியிட வேண்டும்.

திருநெல்வேலி மக்களவைத் தொகுதியை திமுக கூட்டணியில் காங்கிரஸுக்கு ஒதுக்க வேண்டும்' என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தமிழ்நாடு சட்டப்பேரவை காங்கிரஸ் குழு தலைவர் ராஜேஷ் குமார், எம்.எல்.ஏ.க்கள் ரூபி மனோகரன், பழனி நாடார் உட்பட முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கூட்டத்துக்குப் பின் செய்தியாளர்களிடம் செல்வப் பெருந்தகை கூறியதாவது: "இத்தேர்தல் தேசத்தின் 2-ம் சுதந்திரப் போர் ஆகும். தமிழகத்தை பிரதமர் மோடி ஓரம் கட்டி வஞ்சித்து வருகிறார். தமிழக மக்கள் ஒரு போதும் பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ்-ஐ ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். பாஜக ஆட்சியில் இல்லாத மாநிலங்களை மாற்றாந் தாய் மனப் பான்மையுடன் மத்திய அரசு நடத்துகிறது. தமிழகத்தில் நோட்டாவை விட மோசமாக பாஜக உள்ளது." இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்தில் ஓய்வுபெற்ற அதிகாரிகளை களமிறக்கும் தமிழக பாஜக

மதுரை : மார். 6–

மக்களவைத் தேர்தல் தேதி இன் னும் அறிவிக்கப் படாத நிலையில் தேர்தல் பணியை அரசியல் கட்சிகள் தீவிரப்படுத்தியுள்ளன. கூட்டணி பேச்சுவார்த்தை, தொகுதி பங்கீடு என கட்சிகள் பரபரப்பாக இயங்கி வரும் நிலையில் கடந்த வாரம் பிரதமர் மோடி பல்லடம், நெல்லைக்கு வந்து சென்ற பின்பு தமிழகத்தில் அரசியல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

இந்த பரபரப்புக்கு இடையே பிரதமர் மோடி நேற்று முன்தினம் திங்கள்கிழமை சென்னையில் பாஜக பொதுக் கூட்டத்தில் பங்கேற்று பேசியுள்ளார். தமிழகத்தில் பாஜக தேர்தல் பணியை சில மாதங்களுக்கு முன்பே தொடங்கி விட்டது. பல இடங்களில் கட்சியின் சின்னத்தை முன்னிறுத்தி பாஜகவினர் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்துக்கு மத்திய, மாநில அரசு துறைகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களை பயன்படுத்த பாஜக திட்டம் வகுத்துள்ளது. இவர்களுக்காகவே பாஜகவில் தனி அணி உருவாக்கப்பட்டு மாநிலம், மாவட்ட அளவில் நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதேபோல் மத்திய, மாநில அரசு துறைகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களை கட்சியில் சேர்க்கும் பணி பாஜக அரசு தொடர்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மத்தியிலும், மாநிலத்திலும் தலா 40 அரசு துறைகள் உள்ளன. இந்த 80 துறைகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அதிகாரிகளை நேரில் சந்தித்து கட்சியில் சேர்க்கவும் அல்லது ஆதரவாளர்களாக மாற்றவும், தேர்தல் நேரத்தில் இவர்களை தேர்தல் பிரச்சாரத்துக்கு பயன் படுத்தவும் பாஜக அரசு தொடர்பு பிரிவு நிர்வாகிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து அரசு தொடர்பு பிரிவு மாநில செயலாளர் ராஜ ரத்தினம் கூறியதாவது: மத்திய, மாநில அரசுகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள், அவர்கள் குடும்பத்தினரை சந்தித்து பேசி வருகிறோம். பணியில் இருந்த காலத்தில் அவர்களால் பலனடைந்தவர்கள் ஏராளமானோர் இருப்பர். இவர்களை ஓய்வு பெற்ற அதிகாரிகள் மூலம் அணுகி தேர்தலில் பாஜகவுக்கு வாக்களிக்க செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளோம்.

ஓய்வுபெற்ற அதிகாரிகளுக்கு மத்திய, மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடு, பயனாளிகள் விவரங்கள் தெரிந்திருக்கும். அந்த விவரங்கள் பாஜகவின் தேர்தல் பிரச்சாரத்துக்கு பயன்படுத்தப்படும். ஓய்வுபெற்ற அதிகாரிகள் முழுமையாக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுவர் என்று கூறினார்.

### போதைப்பொருள் கடத்தல் வழக்கில்

## ஜாபர் சாதிக்கின் சகோதரர் முகமது சலீம் விசிக–வில் இருந்து நீக்கம்

சென்னை : மார். 6–

ரூ.2000 கோடி மதிப்பிலான போதைப்பொருள் கடத்தல் வழக்கில் தேடப்பட்டு வரும் ஜாபர் சாதிக்கின் சகோதரர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

டெல்லியில் உள்ள மத்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு போலீஸார் மேற்கு டெல்லியின் கைலாஷ் பார்க் பகுதியில் உள்ள குடோனில் போதைப் பொருட்கள் தயாரிக்கப் பயன்படும் ரூ.2 ஆயிரம் கோடி மதிப்புள்ள 50 கிலோ ரசாயனப் பொருட்கள் பறிமுதல் செய்தனர்.

இதில், தொடர்புடைய தமிழகத்தைச் சேர்ந்த 3 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், மூளையாகச் செயல்பட்டது தமிழ் திரைப்பட தயாரிப்பாளரும், திமுக சென்னை மேற்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளராக இருந்தவருமான ஜாபர் சாதிக் என்பது தெரிந்தது.



இதையடுத்து, அவரை விசாரிக்க முயன்றபோது தலைமறைவானார். அவர் வெளிநாடு தப்பிச் செல்வதை தடுக்க, அனைத்து விமான நிலையங்களுக்கும் 'லுக்-அவுட்' நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அவரது 8 வங்கி கணக்குகளும் முடக்கப்பட்டன.

ரூ.2000 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் கடத்தல் வழக்கில் தலைமறைவாக உள்ள ஜாபர் சாதிக்கின் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் பிரபலங்கள் கண்காணிப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், ஜாபர் சாதிக் உடன் தலைமறைவாக உள்ள அவரது சகோதரர் முகமது சலீம் என்பவரும் போலீஸாரின் கண்காணிப்பு வளையத்துக்குள் உள்ளனர்.

முகமது சலீம், விடுதலை சிறுத்தைகள் கட்சியில் செயல்பட்டு வந்துள்ளார். போதைப்பொருள் வழக்கால் தற்போது ஜாபர் சாதிக்கின் சகோதரர் முகமது சலீம் விடுதலை சிறுத்தைகள் கட்சியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இதுதொடர்பாக விசிக விடுத்துள்ள அறிக்கையில், "கட்சியின் நன்மதிப்புக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் செயல்பட்டுவருவதால் முகமது சலீம் கட்சியின் அடிப்படை உறுப்பினர் தகுதியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இவருடன் யாரும் கட்சி தொடர்பாக எந்த தொடர்பும் வைத்துக்கொள்ள கூடாது." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தண்டையார்பேட்டையில் பேருந்து பணிமனையை நவீனப்படுத்தி பேருந்து முனையமாக மாற்றுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது





மாதிரி புகைப்படம்

சென்னை, மார். 6–

சென்னை தண்டையார்பேட்டை பேருந்து பணிமனையை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் நவீனமயப்படுத்தப்படுத்த ஆர்கே நகர் சட்டமன்ற உறுப்பினர் எபினேசர் இன்று அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

தண்டையார்ப்பேட்டை பேருந்து நிலையம் சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் ரூ. 26.75 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படுகிறது. இப்பேருந்து நிலையத்தில் ஒரே நேரத்தில் 15 பேருந்துகள் உள்ளே சென்று வர வழி வகை செய்யப்பட்டுள்ளது.

• பிரதான முனைய கட்டிடத்தின் அடித்தளத்தில் 137 இருசக்கர வாகன நிறுத்துமிடம்.

• தரைத்தளத்தில் பயணிகளுக்கான உணவகம், காத்திருக்கும் இடம், ஏ டி எம், தாய்மார்கள் பாலூட்டும் அறை மற்றும் கடைகள்.

முதல் தளத்தில் பேருந்து நிலைய பணியாளர்களுக்கான அலுவலக அறை, ஆலோசனை அறை, பயிற்சிக்கூடம் மற்றும் கண்காணிப்பு அறை.

• இரண்டாம் தளத்தில் பேருந்து ஓட்டுனர்களுக்கான ஓய்வு அறை.

• பயணிகள் பல்வேறு தளத்திற்கு செல்ல 2மின்தூக்கிகள்,

• 18 நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் 19 இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம்.

உள்ளிட்ட வசதிகளுடன் பேருந்து முனையம் அமைக்கப்பட உள்ளது

தண்டையார்பேட்டை பேருந்து பணிமனையை பேருந்துமுனையமாக மாற்றும் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டு விழாவில் தண்டையார்பேட்டை மாநகராட்சி மண்டல குழு தலைவர் நேதாஜி யு. கணேசன், பகுதி செயலாளர்கள் ஜெபதாஸ் பாண்டியன் லட்சுமணன், அவைத்தலைவர் அனிபா , கவுன்சிலர் மணிமேகலை ஏழுமலை,வட்ட செயலாளர் ஏழுமலை பெருநகர வளர்ச்சி குழு அதிகாரிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# "நிலக்கடலை மற்றும் பயறு வகைகள் வளர்ப்புக் குறித்த களஆய்வு பணி"



காரைக்கால்

காரைக்கால் - பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் அறிவியல் ஆய்வு நிலையத்தில் இறுதியாண்டு படிக்கும் வேளாண். மாணவர்கள், புதுச்சேரிக்கு சென்று கடந்த மூன்று மாதகாலமாக "ஊரக வேளாண் பணி" செயல் திட்டத்தின் வாயிலாக களஆய்வு செய்து பல்வேறு பயிற்சி மற்றும் தொழில் நுட்பங்களைக் கற்றனர்.

இப்பயிற்சியின் முக்கிய நிகழ்வு கரிக்கலாம்பாக்கம் வேளாண் அலுவலகத்துக்குட்பட்ட பகுதியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் துணை வேளாண் அலுவலர் கிருஷ்ணன் தலைமையேற்றார். இதில் நிலக்கடலை மற்றும் தானிய வகைளின் வளர்ப்பு குறித்த செயல்முறையும் பயிற்சியும் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியை பல்நோக்கு ஊழியர் தம்புசாமி ஏற்பாடு செய்திருந்தார். மேலும் இதில் இருபதிற்கும் மேற்பட்ட பெண்களும் விவசாயிகளும் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



▶ புதுச்சேரி அரசு ஊரக வளர்ச்சி இயக்ககம், புதுச்சேரி மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் காரைக்கால் வட்டார வளர்ச்சி அலுவலகம் இணைந்து நடத்திய பாலின வன்முறைக்கு எதிரான பிரச்சார நிகழ்வின் ஒரு பகுதியாக நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்து திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை கோட்டுச்சேரி நெடுங்காடு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ச.சந்திர பிரியங்கா தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்கள். அ. ரெங்கநாதன் இணை வட்டார வளர்ச்சி அதிகாரி தலைமையுரை ஆற்றினார். சிறப்பு பேச்சாளர் வாசுகி ஜெயராமன் விபேர்ட்ஸ் தொண்டு நிறுவனம் புவனேஷ்வரி. அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ் துறை மூன்றாம் ஆண்டு மாணவி செல்வி அகல்யா மாஸ்கோ ஆகியோர் பாலின சமத்துவம் சம்பந்தமான உரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் கோலப்போட்டி நடத்தபட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. விரிவாக்க அலுவலகர்கள், கிராம சேவக், வட்டார அளவிலான கூட்டமைப்பின் பொறுப்பாளர்கள், வட்டார அளவிலான கூட்டமைப்பின் மேலாளர், கணக்காளர், வட்டார மேலாளர்கள், சமூக வல்லுனர்கள், கணக்காளர்கள், சிஆர்பிஸ் ,ஜெண்டர் சிஆர்பிஸ், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

# விற்பனை கூடம் சார்பில் விழிப்புணர்வு முகாம்



மயிலாடுதுறை, மார்- 06:

செம்பனார் கோவில் ஒழுங்கு முறை விற்பனை கூடம் சார்பில் வேளாண் உழவர் நலதுறை செயலர் செல்வி அபுர்வா மற்றும் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக துறை ஆணையர் ஜி. பிரகாஷ் ஆகியோரின் அறிவுருத்தலின் படி நாகப்பட்டினம் விற்பனை குழு செயலாளர் ரமேஷ் அலோசனையின் படி விவசாயிகளின் விளை பொருட்களை நல்ல விளைக்கு விற்பனை செய்து பயன் அடையும் நோக்கத்துடனும் மின்னணு தேசிய வோளாண் சந்தை ததிட்டத்தின் பயன் மற்றும் அவசியத்தை விவசாயிகளிடம் எடுத்துரைத்து விழிப்புணர்வு முகாம் பாகசாலை, எருமல், கொண்டத்தூர், குருமணங்குடி, கிராமத்தில் கண்காணிப்பாளர்கள் சங்கர் ராஜா, பாரதிராஜா தலைமையில் பொறுப்பாளர் சிலம்பரசன், முன்னிலையில் மேற்பார்வையாளர் பாபு ,பாலசந்திரன் ஆகியோர்ள் திட்டத்தை விளக்கி எடுத்துரைத்தனர்.

மேலும் விற்பனை குழு அலுவலர்கள் குமரவேல், அகோரமூர்த்தி, மதியழகன் துண்டு பிரசுரங்கள் வழங்கி திட்டங்ளையும் பயன்களையும் கூறினார்கள் மேலும் செயலாளர் ரமேஷ் கூறுகையில் விவசாயிகள் தங்களின் விளை பொருட்களான நெல், எள், கம்பு, கேழ்வரகு, மக்கா சோளம், மிளகாய், பச்ச பயறு, உளுந்து, முந்திரி போன்ற விளை பொருட்களை நாகை விற்பனை ககுழு கீழ் இயங்கும் செம்னார் கோவில், சீர்காழி, மயிலாடுதுறை, குத்தாலம், வேதார்ண்யம், கீழ்வேளூர், நாப்பட்டினம், திருப்பூண்டி ஆகிய விற்பனை கூடங்களின் மூலம் விற்று பயன் பெருமாறு விவசாயிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

## மாற்று திறனாளிகள் அலைக்கழிக்கப்படுவதாகவும் அடக்குமுறைக்கு

# ஆளாக்கப்படுவதாகவும் மாற்றுத்திறனாளி நல அலுவலர் மீது மாற்றுத் திறனாளிகள் கூட்டமைப்பு குற்றச்சாட்டு



திருவள்ளூர்

திருவள்ளூர் மாவட்ட பகுதியில் உள்ள மாற்றுத்திறனாளிகள் தங்களின் கோரிக்கைகளை மாற்றுத்திறனாளிகள் நலனுக்கான குறை தீர்ப்பு கூட்டத்தில் பங்கேற்ற தங்களின் குறைகளை ஆட்சியரிடம் தெரிவித்து வந்த நிலையில் தற்போது மக்கள் குறை தீர்ப்பு கூட்டத்திலேயே மாற்றுத்திறனாளிகளும் தங்களின் கோரிக்கைகளை வைக்க வேண்டும் என ஆட்சியர் அறிவிப்பினை தொடர்ந்து ஆட்சியர் அலுவலகத்தில் குறை தீர்ப்பு கூட்டத்திற்கு வரும் மாற்றுத்திறனாளிகளை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அலுவலர் அலைகழிப்பதாகவும் அடக்கு முறைக்கு ஆளாக்குவதாகவும் குற்றச்சாட்டினை திருவள்ளூர் மாவட்ட வசந்தம் கூட்டமைப்பைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வரும் மாற்றுத்திறனாளிகளுக்கு தனி முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் அவர்களை தனித்துவமாக கருதி முன்னுரிமை அளித்து மாவட்ட ஆட்சியர் மனுக்களை பெற வேண்டும் எனவும் மேலும் மாற்றுத்திறனாளிகளை அலைக்கழிக்கும் திருவள்ளூர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர் .

# சிறுவாபுரி பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் சுவாமி தரிசனம் செய்ய அடிப்படை வசதிகள் செய்து தர பக்தர்கள் கோரிக்கை





ஊத்துக்கோட்டை, மார். 6–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரியில் பிரசித்தி பெற்ற பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது.இக்கோவிலை கடந்த 2022-ம் ஆண்டு புனரமைத்து மகா கும்பாபிஷேகம் செய்து வைத்தனர்.

இதன் பின்னர், இக்கோவிலுக்கு சுவாமி தரிசனம் செய்ய வரும் பக்தர்களின் கூட்டம் நாளுக்கு, நாள் கட்டுக்கடங்காத வகையில் அதிகரித்த வண்ணம் உள்ளது. மேலும், இக்கோவிலில் மரகத விநாயகர்,மரகத மயில் உள்ளிட்ட பல்வேறு சிறப்புகளும், தொடர்ந்து ஆறு வாரங்கள் செவ்வாய்க்கிழமைகளில் இக்கோவிலுக்கு வந்து நெய்தீபம் ஏற்றி வழிபட்டால் வீடு, நிலம், வேலை வாய்ப்பு, திருமணம், பிள்ளைபேரு உள்ளிட்ட பக்தர்களின் வேண்டுதல்கள் நிறைவேறும் என்பது நம்பிக்கையாக உள்ளது. இதனால் இக்கோவிலுக்கு செவ்வாய்க்கிழமைகளில் கட்டுக்கடங்காத வகையில் பக்தர்களின் கூட்டம் வந்த வண்ணம் உள்ளது. ஆனால், இவ்வாறு வரும் பக்தர்கள் விரைவாக சுவாமி தரிசனம் செய்ய இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளும், காவல்துறை மற்றும் வருவாய்துறைஅதிகாரிகள் உரிய ஏற்பாடுகள் செய்யவில்லை என்று பக்தர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

மேலும், அடிப்படை வசதிகளான குடிநீர், கழிவறை வசதி, நிழல் தரும் பந்தல் வசதி உள்ளிட்ட வசதிகளை செய்து தர வேண்டும்என கோரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையில், நேற்று முருகனுக்கு உகந்த தினமான செவ்வாய்க்கிழமையாகும். எனவே, நேற்று விடியற்காலைமூலவருக்கு சிறப்புபூஜைகள், பல்வேறு வகையான திரவங்களால் சிறப்பு அபிஷேகம் உள்ளிட்டவைகளை செய்தனர்.இதன் பின்னர், ராஜ அலங்காரம் செய்து மகாதிபராதனை காண்பித்தனர்.நேற்று விடியற்காலை முதலே இக்கோவிலில் பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம்செய்தனர்.மேலும், கோவிலுக்கு செல்லும் வழியையும்,தரிசனம் செய்துவிட்டு வெளியே வரும் வழியையும் ஒவ்வொரு வாரமும் மாற்றி,மாற்றி அமைப்பதால் பக்தர்கள், முதியவர்கள், பெண்கள்,குழந்தைகள் உள்ளிட்டோர் கோவிலுக்குள் செல்வதிலும், வெளியே வருவதிலும் மிகுந்த சிரமத்துக்கு உள்ளானார்கள்.

கடந்த ஆண்டு இந்தக் கோவிலில் தீபம் ஏற்றிய பெண் பக்தர் ஸ ஒருவர் தீகாயம் அடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். எனவே, இக்கோவிலுக்கு போதிய அளவு பாதுகாப்பு நடவடிக்கைகளை இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என பக்தர்கள் சார்பில் கோரிக்கை விடுத்தனர்.

பக்தர்கள் நீண்ட வரிசையில் 5 மணி நேரம்வரை காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.எனவே, வரும் காலங்களில் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள், குழந்தைகள் உள்ளிட்டோர் சிரமமின்றி விரைவாக சுவாமி தரிசனம் செய்ய சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பக்தர்களும், சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கூட்டம் கட்டுக்கடங்காமல் வந்ததால் சிறுவாபுரி-புதுரோடு சாலையிலும்,சிறுவாபுரி-அகரம் சாலையிலும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. மேலும், சாலையின் இருபுறமும் வியாபாரிகள் சாலையை ஆக்கிரமிப்பு செய்து கடைகள் வைத்துள்ளனர்.இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது இதனால் வாகன ஓட்டிகள் மிகவும் பாதிக்கப்பட்டது.

இதனால் பெரியபாளையத்தில் இருந்து செங்குன்றம் செல்லும் தடம் எண்:547,கோயம்பேட்டில் இருந்து ஆரணிக்கு செல்லும் தடம் எண்:114டி ஆகிய பேருந்துகளை ஓட்டுநர்கள் மிகுந்த சிரமத்துடன் இயக்கினர்.

# மாற்றுத்திறனாளிக்கு உபகரணங்கள் வழங்குதல் தொடர்பாக மருத்துவ முகாமை டி.ஜே.கோவிந்தராஜன் எம்எல்ஏ துவக்கி வைத்தார்





ஊத்துக்கோட்டை, மார். 6–

திருவள்ளூர் மாவட்டம் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் சார்பாக திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, பொன்னேரி தொகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிக்கு உதவி உபகரணங்கள் வழங்குதல் தொடர்பான மருத்துவர்களின் ஆலோசனை வழங்கும் முகாம் நேற்றும், இன்றும் நடைபெறுகிறது. கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கவரப்பேட்டையில் உள்ள டி.ஜே.எஸ்.லட்சுமி திருமண மண்டபத்தில் காலை 10 மணி முதல் மதியம் ரெண்டு மணி வரையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு, மாவட்டமாற்றுத்திறனாளி நல அலுவலர் சீனிவாசன் தலைமை தாங்கினார். கீழ் முதலம்பேடு ஊராட்சிமன்ற தலைவர் நமச்சிவாயம் முன்னிலை வகித்தார்.இதில், சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் கலந்து கொண்டு இந்த ஆலோசனை வழங்கும் முகாமை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில், எம். எல்.ரவி, ராமஜெயம், திருமலை, பிரசாத், பாஸ்கரன், தில்லைகுமார் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர்.

# முதுகலை மருத்துவ மாணவருக்கும் பெண் நோயாளிக்கும் அடிதடி: அல்லோல கல்லோலப்பட்ட வேலூர் ஆஸ்பத்திரி



வேலூர். மார்ச். 6.

வேலூர் அடுத்த சாத்துமதுரை பகுதியை சேர்ந்தவர் சுபா (36) இவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்ட நிலையில் கடந்த மாதம் முதல் 7 நாட்களாக அடுக்கம்பாறையில் உள்ள வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பெண்கள் சிகிச்சை வார்டில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில் இவரை காண ஆண் உறவினர் ஒருவர் வந்துள்ளார். அப்போது அங்கு வந்த முதுகலை மருத்துவம் பயிலும் மருத்துவர் விஷால் என்பவர் சுபாவுக்காக ஒதுக்கப்பட்டிருந்த படுக்கையில் அமர்ந்திருந்த ஆண் நபரை இது பெண்களுக்கான வார்டு என்றும் இதிலிருந்து வெளியேறும்படியும் கூறியுள்ளார்.

இதனால் இருவருக்கும் மத்தியில் வாக்குவாதம் உருவானது. இதில் ஒருவரை ஒருவர் சரமாரியாக தாக்கிக் கொண்டுள்ளனர். இதனை பார்த்த நோயாளி சுபா இருவரை தடுக்க முயன்ற போது மருத்துவர் சுபாவை அறைந்ததாக கூறப்படுகிறது.


இதனால் ஆத்திரமடைந்தவர் தான் அணிந்திருந்த கலணியால் மருத்துவரை தாக்கியுள்ளார். இது அங்கிருந்த நோயாளிகள் மற்றும் மருத்துவர்கள் மத்தியில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த வேலூர் தாலுகா காவல்துறையினர் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டனர். மேலும் மருத்துவரை தாக்கிய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி மருத்துவக் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை அடுத்து பாதிக்கப்பட்ட முதுகலை மருத்துவ மாணவர் விஷால் அளித்த புகாரின் அடிப்படையில் மருத்துவரை தாக்கி பணி செய்ய விடாமல் தடுக்கும் சட்டம், உள்ளிட்ட 5 பிரிவுகளின் கீழ் மருத்துவரை தாக்கிய பெண் நோயாளி சுபா மற்றும் அவரது உறவினர் திவாகர் ஆகிய இருவர் மீதும் வழக்கு பதிவு செய்து இருவரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதுகுறித்து பாதிக்கப்பட்ட நோயாளி சுபா: நான் கடந்த ஏழு நாட்களாக இங்கு சிகிச்சை பெற்று வருகிறேன். எனக்கு மன அழுத்தமும் உள்ளது.

இந்நிலையில் என்னை காண வந்த உறவினரை வார்டுக்கு வந்த மருத்துவர் ஒருமையிலும், அவதூறாகவும் பேசினார். இதை நான் கேட்டதற்கு என்னையும், என் தாயாரையும் தகாத வார்த்தைகளால் அவதூறாக திட்டினார். பின்னர் மருத்துவர் தான் எங்களை முதலில் அறைந்தார் அதன் காரணமாகவே மருத்துவரை தாக்க நேர்ந்தது. வேலூர் மருத்துவக் கல்லூரி முதல்வர் பாப்பாத்தி: பெண்கள் வார்டில் ஆண்கள் நுழையக்கூடாது. ஆனால் அந்த நபர் படுக்கையில் படுத்துள்ளார்.

இதை கேட்டதற்கு மருத்துவரை தாக்கியுள்ளார்கள். செவிலியர்கள் விலக்கிய போதும் செருப்பால் பெண் நோயாளி மருத்துவரை தாக்கியுள்ளார். புகார் அளித்துள்ளோம். காவல் துறை நடவடிக்கை எடுக்கும். அவர்கள் கூறியதில் உண்மைத்தன்மை இல்லை என்றார், பொதுமக்கள் கூறுகையில் பொதுவாக அரசு மருத்துவ மனைகளில் முதுநிலை படிக்கும் மருத்துவ மாணவர்கள் எப்போதும் அனைவரையும் ஒருமையில் பேசுவது வழக்கம், அவர்கள் யாருக்கும் மரியாதை கொடுபது இல்லை,மரியாதை இல்லாமல் பேசுவதால்தான் பல இடங்களில் சண்டை வருகின்றதுஎனதெரிவித்தனர்

# ஓபிஎஸ் மீதான சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணை மார்ச் 25–ம் தேதிக்கு தள்ளிவைத்தது சென்னை உயர் நீதிமன்றம்



சென்னை : மார். 6–

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்துக்கு எதிராகதாமாகமுன்வந்து விசாரணைக்கு எடுத்த வழக்கின் விசாரணையை, சென்னை உயர்நீதிமன்றம், மார்ச் 25-ம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளது.

கடந்த 2001-2006ம் ஆண்டுகளில் மறைந்த முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அமைச்சரவையில் வருவாய்த் துறை அமைச்சராக பதவி வகித்தார். ஓ.பன்னீர்செல்வம். அப்போது வருமானத்துக்கு அதிகமாக ஒரு கோடியே 77 லட்சம் ரூபாய் அளவுக்கு சொத்துக்கள் குவித்ததாக, 2006-ல் திமுக ஆட்சிக் காலத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப்பதிவு செய்தது.

இந்த வழக்கில் பன்னீர்செல்வம் மற்றும் அவரது மனைவி விஜயலட்சுமி, மகன் ரவீந்திரநாத், தம்பி ஓ.ராஜா, அவரது மனைவி சசிகலாவதி, மற்றொரு தம்பி ஓ.பாலமுருகன், அவரது மனைவி லதா மகேஸ்வரி ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. சிவகங்கை நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்த இந்த வழக்கில், குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் இல்லை எனக் கூறி, வழக்கைத் திரும்பப்பெற அனுமதி கோரி லஞ்ச ஒழிப்புத் துறை தரப்பில் அதிமுக ஆட்சியில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

அந்த அறிக்கையை ஏற்றசிவகங்கைநீதிமன்றம், பன்னீர்செல்வம் உள்ளிட்டோரை விடுவித்து 2012-ல் சிவகங்கை நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த உத்தரவை மறு ஆய்வு செய்வது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துள்ளார்.

இந்த வழக்கில் நேற்று முதல் இறுதி விசாரணைக்கு தேதி நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. அதன்படி, வழக்கு நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்பாக வழக்கு விசாரணைக்கு வந்தபோது, ஓபிஎஸ் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், “இந்த வழக்குகளில் மூத்த வழக்கறிஞர் இரண்டு நாட்கள் ஆஜராகி வாதிட இயலாததால், விசாரணையை தள்ளிவைக்க வேண்டும்” என கோரிக்கைவைத்தார். இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, வழக்கின் விசாரணையை மார்ச் 25 மற்றும் 26ம் தேதிகளுக்கு தள்ளிவைத்தார்.

# ஆலங்குடி அருகே கோவிலூர் ஜல்லிக்கட்டில் 50 பேர் காயம்

ஆலங்குடி, மார்.6-

ஆலங்குடி அருகேயுள்ள கோவிலூரில் நடைபெற்ற ஜல்லிக்கட்டில் காளைகள் முட்டியதில் 50 பேர் காயமடைந்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகேயுள்ள கோவிலூர் முத்துமாரியம்மன் கோயில் திருவிழாவையொட்டி நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியை மாநிலச் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்தனர் தொடர்ந்து, வாடி வாசலில் இருந்து கோயில் காளைகள் அவிழ்த்து விடப்பட்டன.

பின்னர், புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சை, திண்டுக்கல், மதுரை மாவட்டங்களைச் சேர்ந்த 613 காளைகள் அவிழ்த்து விடப்பட்டன, வாடிவாசலில் இருந்து சீறிப்பாய்ந்து வந்த காளைகளை பல்வேறு குழுக்களாக 250 மாடுபிடிவீரர்கள் களமிறக்கப்பட்டு காளைகளை தீரத்துடன் அடக்க முயன்றனர். அப்போது, காளைகள் முட்டியதில் மாடுபிடி வீரர்கள், பார்வையாளர்கள் என 50 பேர் காயமடைந்தனர், அவர்களுக்கு அங்கு தயார் நிலையில் இருந்த மருத்துவக் குழுவினர் முதலுதவி சிகிச்சை அளித்தனர்.அதில், பலத்த காயமடைந்த 10 பேர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். காளைகளை

அடக்கிய வீரர்களுக்கும், அடங்காத காளைகளின் உரிமையாளர்களுக்கும் தங்கம், வெள்ளி நாணயங்கள் மிதிவண்டிகள், பாத்திரங்கள் உள்ளிட்ட பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

போட்டியை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கானோர் பார்வையிட்டனர், ஆலங்குடி காவல் துணைக் கண்காணிப்பாளர் பவுல் ராஜ் தலைமையிலான போலீஸார் பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டனர்.

# கந்தர்வகோட்டை எம்.எல்.ஏ சின்னதுரையிடம் அரசு செவிலியர் கல்லூரி தொடங்க வேண்டும் என கோரிக்கை மனு அளிக்கப்பட்டது

கந்தர்வகோட்டை,மார்.6-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் மா.சின்னதுரையிடம் கந்தர்வகோட்டையில் அரசு செவிலியர் கல்லூரி தொடங்க வேண்டும் என மனு அளிக்கப்பட்டது.



புதுக்கோட்டை மாவட்ட தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் முத்துக்குமார் தலைமையில் அளிக்கப்பட்டுள்ள இக்கோரிக்கை மனுவில் தெரிவித்திருப்பதாவது

கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் கிராமப்புற ஏழை எளிய மாணவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் வகையில் தாங்கள் எடுத்து வரும் கல்வி வேலைவாய்ப்பு வளர்ச்சி சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளில் ஒன்றாக இப்பகுதியில் புதியதாக தொழிற்பயிற்சி மையம் பெற்றுத் தந்தமைக்கும், இப்பகுதி மாணவர்கள், இளைஞர்கள்தங்கள் அறிவைப் பெருக்கி வேலைவாய்ப்புகளை பெற்று வாழ்வில் உயர நூலகம் ஏற்படுத்திக் கொடுத்தமைக்கும், கந்தர்வகோட்டை தொகுதியில் உள்ள சேதமடைந்த அரசுப்பள்ளி கட்டிடங்களை இடித்து புதிய கட்டிடங்கள் கட்டித் தரக்கோரியும், விவசாயிகளின் வாழ்வு மேம்படவும் நிலத்தடி நீர் மட்டம் உயரவும் புதியதாக ஆற்றுப்பாசன கால்வாய் வசதி செய்துதரக்கோரியும் சட்டமன்றத்தில் குரல் கொடுத்ததமைக்காகவும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் கந்தர்வகோட்டை வட்டாரத்தின் சார்பாக இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் நம் பகுதியில் புதியதாக செவிலியர் பயிற்சி கல்லூரி தொடங்கிடவும், ராசாப்பட்டி, கொத்தகப்பட்டி, ஆண்டி குலப்பன்பட்டி ஆகிய ஊர்களுக்கு பேருந்து வசதி செய்திடவும், கந்தர்வகோட்டையில் அறிவியல் பூங்கா அமைத்திடவும் ஆவண செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்நிகழ்வில் முன்னாள் முதன்மைக் கல்வி அலுவலர் வே.தமிழரசு, தமிழ்நாடு அறிவியல் இயக்க புதுக்கோட்டை மாவட்ட செயற்குழு உறுப்பினர் மா.சிவானந்தம், கந்தர்வகோட்டை வட்டாரத் தலைவர் துரையரசன், வட்டாரச் செயலாளர் ரகமதுல்லா, பொருளாளர் தங்கராசு உள்ளிட்டோர் கோரிக்கை மனுவினை அளித்தனர்.

# 'பெங்களூருவின் முக்கிய இடங்கள் டார்கெட்' கர்நாடக அரசுக்கு மின்னஞ்சலில் வெடிகுண்டு மிரட்டல்

பெங்களூரு : மார். 6-

கர்நாடக அரசுக்கு மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளது. பெங்களூருவின் முக்கிய இடங்களில் உள்ள உணவகங்கள், கோயில்கள், பேருந்துகள் போன்றவற்றில் வெடிகுண்டு வெடிக்கும் அந்த மின்னஞ்சலில் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.



பெங்களூருவில் ஒயிட் ஃபீல்ட் அருகில் செயல்பட்டுவந்த 'ராமேஸ்வரம் கஃபே' என்ற பிரபல உணவகத்தில் கடந்த 1-ம் தேதி சக்தி குறைந்த குண்டுவெடித்தது. இதில் 10பேர் காயமடைந்தனர். ராமேஸ்வரம் கஃபே உணவகத்தில் குண்டுவெடித்த வழக்கு தேசிய புலனாய்வு முகமையின் (என்ஐஏ) விசாரணைக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில், மாநிலத்தில் மீண்டும் அச்சம் ஏற்படுத்தும் வகையில் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

ஷாஹித் கான் என்பவர் பெயரில் கர்நாடக முதல்வர் சித்தராமையா, துணை முதல்வர் டி.கே. சிவக்குமார், உள்துறை அமைச்சர் மற்றும் பெங்களூரு போலீஸ் கமிஷனர் ஆகியோருக்கு வெடிகுண்டு மிரட்டல் மின்னஞ்சல் வந்துள்ளது.

அந்த மின்னஞ்சலில், "வரும் சனிக்கிழமை மதியம் 2.48 மணிக்கு பெங்களூருவின் முக்கிய இடங்களில் உள்ள உணவகங்கள், கோயில்கள் மற்றும் பேருந்துகள், ரயில்களில் வெடிகுண்டு வெடிக்கும். குண்டுவெடிப்பைத் தவிர்க்க ரூ.20 கோடி வேண்டும்" என்று கூறப்பட்டிருந்ததாக சொல்லப்படுகிறது. இந்த மிரட்டல் தொடர்பாக கர்நாடக போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை செய்யத் தொடங்கியுள்ளனர்.



தென்காசி மாவட்டம் புதிய பேருந்துகளை துவக்கி வைத்து விபத்து இல்லாமல் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு வெகுமதி வழங்கும் விழாவிற்கு வருகை தந்த தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் குன்னம் எஸ். எஸ். சிவசங்கர் தென்காசி முன்னாள்வடக்கு மாவட்ட திமுக செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினருமான மா.செல்லதுரை-க்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது, இந்நிகழ்ச்சியில் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே. ஜெயபாலன்,கடையநல்லூர் நகர மன்றத் தலைவர் மூப்பன் ஹபீபூர் ரஹ்மான், தென்காசி தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கடையநல்லூர் ஒன்றிய குழு துணைத் தலைவர் ஐவேந்திரன் தினேஷ், பாண்டிச்சேரி சுகுமார் மணிகண்டன், முருகானந்தம்,நல்லையா, ஹக்கீம், ஆகியோர் கலந்து கொண்டு அமைச்சர் சிவசங்கருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.



மதுரை கலெக்டர் அலுவலகம் அருகில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அனைத்து பொறியாளர் சங்கங்களின் கூட்டமைப்பு மதுரை கட்டிட பொறியாளர்கள் சங்கம், மற்றும் கட்டுமானம் மனைத் தொழில் கூட்டமைப்பு சார்பாக கட்டிட பணிக்கு தேவையான எம்.சேண்ட்,பி.சேண்ட் மற்றும் ஜல்லி ஆகிய கட்டுமான பொருள்களின் கடுமையான விலையேற்றத்தை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லும் நோக்கில், ஒரு நாள் அடையாளக் கட்டிட வேலை நிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டம், அகில இந்திய கட்டுனர்கள் சங்கத் தலைவர் முருகேசன் தலைமையில் நடைபெற்றது. உடன் அசோசியேசன் சிவில் இன்ஜினியர் தலைவர் சஞ்சய், துணைத்தலைவர் பொன் இரவிச்சந்திரன், செயலாளர் குமரேஷ் பாபு, உசிலம்பட்டி கட்டிடப் பொறியாளர் தலைவர் லெனின் சிவா, செயலாளர் அருண் பிரகாஷ், தண்டபாணி, செந்தில் முருகன், ஆகியோர்களும், சங்கங்களின் பொறியாளர்களும், உறுப்பினர்களும் 200க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் மழையூர் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் மாசி திருவிழாவை முன்னிட்டு தேரோட்டம் நடைபெற்றது, இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர்.



கரூர் கலெக்டர் அலுவலக வளாகத்தில் கலெக்டர் தங்கவேல் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக மனவளர்ச்சி குன்றிய ஆரம்பகால பயிற்சி மையத்தில் உள்ள குழந்தைகள் அவர்களின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான ஒரு நாள் உள்ளூர் சுற்றுலா செல்பவர்களை பார்வையிட்டார்.

# எய்ம்ஸ் கட்டுமான பணியை தேர்தல் முடிந்ததும் நிறுத்திவிடுவார்கள் : அமைச்சர் ரகுபதி அதிரடி

புதுக்கோட்டை : மார். 6-

" மக்களைவைத் தேர்தலுக்காக மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையின் கட்டுமான பணியை தொடங்கியுள்ளனர். தேர்தல் முடிந்த பிறகு பணிகளை நிறுத்தி விடுவார்கள்" என்று அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.



சென்னை நந்தனம் ஒய். எம்.சி.ஏ. திடலில் பாஜக சார்பில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, "காங்கிரஸ், திமுக உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகள் ஊழலில் ஊறியுள்ள கட்சிகள். கூட்டணியில் உள்ள திமுக, காங்கிரஸ் போன்ற கட்சிகள், குடும்பத்திற்கு முன்னுரிமை அளிக்கின்றன. இவர்கள் குடும்பத்திற்காக நாட்டின் சொத்துகளை கொள்ளை அடிக்கின்றனர்" என்று கடுமையாக விமர்சித்திருந்தார்.

இந்நிலையில், நேற்று புதுக்கோட்டையில் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி, செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது திமுக மீதான மோடியின் குற்றச்சாட்டு குறித்த கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர், "மோடி 10 பணக்காரர்களிடம் கொடுத்துள்ள பணத்தைக் கொண்டு வந்ததாலே, இந்தியாவில் உள்ள அனைவரும் கோடீஸ்வரர்களாக மாறிவிடுவார்கள். திமுக கட்சி எந்த பணத்தையும் கொள்ளையடிக்கவில்லை. எங்களிடம் எந்த பணமும் இல்லை. எங்கு வேண்டுமானாலும் வந்து சோதனை செய்து கொள்ளட்டும். எங்களுக்கு மடியில் கனமில்லை. மோடி சொல்வதுக்கு எல்லாம் மக்கள் மதிப்பு கொடுக்க மாட்டார்கள்" என்றார்.

மதுரை எய்ம்ஸ் கட்டுமான பணி குறித்த கேள்விக்கு, "மக்களவைத் தேர்தலுக்காக மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையின் கட்டுமான பணியை தொடங்கியுள்ளனர். இதெல்லாம் வெறும் தேர்தல் கண்துடைப்புதான். தேர்தல் முடிந்த பிறகு கட்டுமான பணியை நிறுத்திவிடுவார்கள். தேர்தலில் வெற்றிப் பெறுவதற்காக எந்த கண்துடைப்புவேலைகளையும் பாஜகவினர் செய்வார்கள்" என்று அமைச்சர் ரகுபதி விமர்சித்தார்.

சனாதனத்தை காக்க வந்தவர் வைகுண்டர் என ஆளுநர் பேச்சு குறித்த கேள்விக்கு, "தற்போது தமிழக அரசியலில் பாஜகவும் இல்லை. அதிமுகவும் இல்லை. திமுகவிற்கு எதிர்க்குரல் எழுப்ப வேண்டும் என்பதற்காகவே ஆளுநர் பேசு பொருளாக இருக்க வேண்டும் என்பதற்காகவே சர்ச்சையாக பேசி வருகிறார். பாஜகவை போல் அவரும் ஒரு எதிர்க்கட்சியினரை போல் செயல்பட்டு வருகிறார்" என்றார்.

# இரயில் விபத்தை தவிர்த்த செங்கோட்டை தம்பதியை நேரில் சந்தித்து தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ பாராட்டு

சங்கரன்கோவில், மார்.6-

கடந்த பிப் 25ம் தேதி செங்கோட்டையை அடுத்த புளியரை பகுதியில் அதிகாலை சுமார் 01.00 மணிக்கு 20 மீட்டர் உயர மலைப்பாதையில் பிளைவுட் பலகைகள் ஏற்றப்பட்ட லாரி ஒன்று பயணித்து கொண்டிருந்தது, திடீரென அந்த லாரி மலை பாதையில் இருந்து கவிழ்ந்து உருண்டு அருகில் உள்ள ரயில் பாதையில் விழுந்தது.



லாரி விழுந்த பலத்த சத்தத்தை கேட்டு அருகில் வசித்த தம்பதி சண்முகையா மற்றும் வடக்குத்தியாள் இருவரும் வெளியே வந்து விபத்தை பார்த்தனர். அந்த நேரத்தில் உடனே இருவரும் டார்ச் லைட்டுகளை ஒளிரச் செய்து அசைத்து கொண்டே ரயிலை நிறுத்த பகவதிபுரம் நோக்கிரயில்பாதையில் ஓடினர். அந்த நேரத்தில் புனலூர் நோக்கி திருவனந்தபுரத்திற்கு ஆற்றுக்கால் பொங்கல் பண்டிகைக்காக சிறப்பு ரயில் இயக்க காலி ரயில் பெட்டி தொடர்வண்டி வந்து கொண்டிருந்தது. இவர்கள் அசைக்கும் விளக்கொளியை பார்த்து காலி பெட்டி தொடர் ரயிலை நிறுத்தினார் ரயிலின் லோகோ பைலட்.விபத்து நடந்த இடத்திலிருந்து 100 மீட்டருக்கு முன்பாக ரயில் நிறுத்தப்பட்டது.

இதனால் பெரிய ரயில் விபத்து தவிர்க்கப்பட்டது, இதைக் கேள்விப்பட்ட தமிழகமுதல்வர்மு.க. ஸ்டாலின் அந்த தம்பதியை நேரில் அழைத்து பாராட்டி ரூ. 5 லட்சம் பரிசு தொகையை வழங்கினார்,

மேலும் அமைச்சர் உதயநிதி ஒரு லட்சம் பரிசுத்தொகை வழங்கினார்,

இந்நிலையில் புளியரையில் உள்ள வீட்டில் அந்த தம்பதியை வீட்டில் நேரில் சந்தித்து ராஜா எம்எல்ஏ வாழ்த்து தெரிவித்தார், பின்பு தம்பதியருக்கு ரொக்க பரிசும் வழங்கி சால்வை அணிவித்து கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் ரயில்வே ஆலோசனைக்குழு உறுப்பினர் பாண்டியராஜா மற்றும் பலர் உடன் இருந்தனர்.

# திருவப்பூர் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் தேர் திருவிழாவை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிப்பு

புதுக்கோட்டை , மார்.6-

திருவப்பூர் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் தேர் திருவிழாவை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது ; புதுக்கோட்டை தாலுகா, புதுக்கோட்டை நகரைச் சேர்ந்த திருவப்பூர் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோவில் தேர்த்திருவிழா 11.03.2024 அன்று நடைபெறுவதை முன்னிட்டு அன்றையதினம் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை எனவும், அதற்கு பதிலாக 16.03.2024 சனிக்கிழமை அன்று பணிநாள் எனவும், வழக்கமாக சனிக்கிழமைகளை பணி நாளாகக் கொண்ட அலுவலகங்களுக்கு 17.03.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று பணிநாள் எனவும் அறிவிக்கிறேன்.

இந்த உள்ளூர் விடுமுறை 1881-ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின் கீழான விடுமுறை நாள் அல்ல எனவும், இந்த உள்ளூர் விடுமுறை நாளன்று புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மாவட்ட கருவூலகம் மற்றும் சார்நிலை கருவூலகங்களும் குறைந்தபட்ச அலுவலர்களுடன் அரசின் பாதுகாப்பினைக் கருதியும் அவசர அலுவல்கள் மேற்கொள்ளும் பொருட்டு திறந்திருக்கும் எனவும் அறிவிக்கிறேன். மேலும், அரசு பொதுத்தேர்வுகள், அரசு அறிவித்த தேதிகளில் நடைபெறும் எனவும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "நான் மனைவியை இழந்து தவிப்பது போல், நீங்களும் எவ்வளவோ வலிகளோடு கணவனை இழந்து தவித்துக்கொண்டிருக்கிறீர்கள்"- மேடையில் அழுத அமைச்சர் சி.வெ.கணேசன்

நெய்வேலி : மார். 6-

நெய்வேலி என்எல்சி இந்திய லிமிடெட் நிறுவனம் சார்பில் திட்டக்குடி சட்டமன்ற தொகுதியில் உள்ள கணவனை இழந்த 2000 பெண்களுக்கு ரூ. 2 கோடி மதிப்பீட்டில் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டது. தமிழக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தையல் இயந்திரங்களை வழங்கினார். முன்னதாக, விழாவில் பேசும்போது தனது மனைவி குறித்து பேசி கண்ணீர் வடித்தார் அமைச்சர் சி.வெ. கணேசன்.

விழாவில் பேசிய அமைச்சர் சி.வெ. கணேசன், "கஷ்டம் வரும்போதெல்லாம், மனதில் வேதனை ஏற்படுகிற போதெல்லாம் என்னுடைய மனைவி தையல் மிஷினில் உட்கார்ந்து தைக்க ஆரம்பிப்பார். பெண்கள் தங்களுக்கு ஏற்படுகின்ற வலி, கஷ்டம், குடும்ப பாரத்தை வெளியே சொல்ல முடியாமல் இருக்கிறபோது தையல் மிஷினே கதி என்று இருப்பார்கள்.

இதை பார்த்து திட்டக்குடி தொகுதியிலேயே எவ்வளவு பெண்கள் கணவனை இழந்து கஷ்டப்பட்டு கொண்டு இருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் தையல் மிஷின் வாங்கி கொடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். இந்த முயற்சியிலும் அப்படி



தான் இறங்கினேன். இங்கு வந்திருக்கிற பெண்களை பார்க்கிற போது, எனது சகோதரிகள், எனது தாயார் தான் நினைவுக்கு வருகிறார்கள்.

இது என் மனைவியின் ஆசை. என் மனைவியின் எண்ணம். யாரையும் ஏமாற்றக்கூடாது எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டும் என்பார் எனது மனைவி. நான் மனைவியை இழந்து தவிப்பது போல், என்னை போல் நீங்களும் எவ்வளவோ வலிகளோடு கணவனை இழந்து தவித்துக் கொண்டிருக்கிறீர்கள். எனவேதான் உங்களில் ஒருவனாக ஒரு சகோதரனாக உதவி செய்ய வேண்டும் என்று எண்ணியே இத்தகைய முயற்சியில் ஈடுபட்டு கொண்டிருக்கிறேன்.

இந்த தொகுதியில் கணவனை இழந்து வாடும் பெண்களுக்கு இன்னும் செய்வேன். ஒன்றும் முடியவில்லை என்றாலும் என்னிடம் இருக்கும் சொத்துக்களை விற்றாவது அவர்களுக்கு உதவி செய்வேன்" என்று கூறினார். மனைவி பற்றி பேசும்போது மேடையில் உடைந்து அழுதார் அமைச்சர் சி.வெ. கணேசன். சில நொடிகள் மனைவியை நினைத்து அழுத அமைச்சரை அவரது ஆதரவாளர்கள் தேற்றினர்.

அமைச்சர் சி.வெ. கணேசனின் மனைவி பவானி (54) விருத்தாசலத்தில் உள்ள அவரது வீட்டில் கடந்த 2021ம் ஆண்டு மாரடைப்பால் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருமயம் பெல் ஊழியர்கள் பங்கேற்ற மாரத்தான் போட்டி

திருமயம் , மார்.6-

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் பெல் ஊழியர்களால் பாரதமிகுமின் நிறுவன ஊழியர்களின் சமூக சேவை அறக்கட்டளை தொடங்கப்பட்டு கடந்த 10 வருடங்களாக கல்வி, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிகள், இரத்ததானம், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, ஆகிய நான்கு பிரிவுகளில் பல்வேறு சேவைகளை செய்து வருகின்றது. 35 வது சாலை பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு சாலை விதிகளை பொதுமக்கள் மற்றும் ஊழியர்கள்பின்பற்றவேண்டும் என்ற நோக்கத்திற்காகவும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும்,பெல் ஊழியர்கள் மட்டும் கலந்து கொண்ட மினி மாரத்தான் போட்டி நடைபெற்றது.



வெற்றி பெற்ற வீரர்களுக்கு வெற்றிக் கோப்பை, மற்றும் பாராட்டு சான்றிதழ், கலந்துகொண்ட அனைவருக்கும் பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் கொடுக்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.அறக்கட்டளை நிர்வாகி சிதம்பரம் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் சாலை செந்தில், மரம் அறக்கட்டளை நிறுவனர் மரம் ராஜா, திருமயம் உதவி காவல் ஆய்வாளர் ராஜு, போக்குவரத்து காவல் சண்முகம், பொறியாளர் முத்துராஜன், விக்னேஷ் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். அறக்கட்டளையின் பொதுச்செயலாளர் சதன்குமார் சேவைகள் பற்றி எடுத்துரைத்தார். அறக்கட்டளை தலைவர் பாலாஜி மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# இந்திய பேட்மிண்டன் வீரர் சாய் பிரனீத் ஓய்வு




**புதுடெல்லி : மார். 6,**

**இந்திய முன்னணி பேட்மிண்டன் வீரர் சாய் பிரனீத் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்று முன்தினம் திங்கள்கிழமை அறிவித்தார்.**

இந்திய முன்னணி பேட்மிண்டன் வீரர் ஐதராபாத்தை சேர்ந்த 31 வயதான சாய் பிரனீத் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்றவரான சாய் பிரனீத், 2019-ம் ஆண்டில் உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப்பில் வெண்கலம் வென்று சாதனை படைத்திருந்தார்.

தனது விளையாட்டு வாழ்க்கையில் புதிய இன்னிங்சை தொடங்க இருக்கும் சாய் பிரனீத், அமெரிக்காவில் உள்ள டிரையாங்கிள் பேட்மிண்டன் அகாடமியின் தலைமை பயிற்சியாளராக அடுத்த மாதத்தில் இணைய இருப்பதாக தெரிவித்துள்ளார்.

# பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு இந்திய டேபிள் டென்னிஸ் அணிகள் முதல்முறையாக தகுதி



**புதுடெல்லி : மார். 6,**

**உலக அணிகள் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி தென்கொரியாவில் கடந்த மாதம் நடந்தது.**

உலக அணிகள் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி தென்கொரியாவில் கடந்த மாதம் நடந்தது. இந்த போட்டியில் காலிறுதிக்கு தகுதி பெறும் அணிகள் நேரடியாக பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு (ஜூலை 26-ஆகஸ்டு 11) தகுதி பெற முடியும் என்ற நிலையில் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்திய ஆண்கள் அணி 0-3 என்ற கணக்கில் தென்கொரியாவிடமும், இந்திய பெண்கள் அணி 1-3 என்ற கணக்கில் சீன தைபேயிடமும் தோற்று வெளியேறின. இதனால் நேரடியாக தகுதி பெறும் வாய்ப்பை இழந்தன.

இந்தநிலையில் தற்போது இந்திய அணிகள் உலக தரவரிசை அடிப்படையில் பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன. புதிய தரவரிசையின் படி ஆண்கள் பிரிவில் சுலோவேனியா (11-வது இடம்), குரோஷியா (12-வது இடம்), இந்தியா (15-வது இடம்) ஆகிய அணிகளும், பெண்கள் பிரிவில் தாய்லாந்து (11-வது இடம்), போலந்து (12-வது இடம்), இந்தியா (13-வது இடம்), சுவீடன் (15-வது இடம்) ஆகிய அணிகளும் பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்று இருக்கின்றன என்று சர்வதேச டேபிள் டென்னிஸ் சம்மேளனம் நேற்று அதிகாரபூர்வமாக அறிவித்தது. ஒலிம்பிக் டேபிள் டென்னிசில் அணிகள் பிரிவு 2008-ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட பிறகு இந்திய அணிகள் தகுதி பெற்று இருப்பது இதுவே முதல்முறையாகும்.

# பெண்கள் பிரீமியர் லீக் : மந்தனாவின் அதிரடியால் ஆர்சிபி அணிக்கு 3-வது வெற்றி




**பெங்களூரு : மார். 6,**

**5 அணிகள் இடையிலான 2-வது பெண்கள் பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை பெங்களூரு சின்னசாமி ஸ்டேடியத்தில் நடந்த 11-வது லீக் ஆட்டத்தில் பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் - உ.பி. வாரியர்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.**

இதில் முதலில் பேட் செய்த பெங்களூரு அணி 3 விக்கெட்டுக்கு 198 ரன்கள் குவித்தது. உள்ளூர் ரசிகர்களுக்கு விருந்து படைத்த கேப்டன் ஸ்மிர்தி மந்தனா 80 ரன்கள் (50 பந்து, 10 பவுண்டரி, 3 சிக்சர்) விளாசினார். எலிஸ் பெர்ரியும் அரைசதம் (58 ரன், 4 பவுண்டரி, 4 சிக்சர்) அடித்தார்.

அடுத்து கடின இலக்கை நோக்கி ஆடிய உ.பி. வாரியர்ஸ் அணியில் கேப்டன் அலிசா ஹீலி களத்தில் நின்றது வரை அவர்களுக்கு நம்பிக்கை காணப்பட்டது. ஹீலி 55 ரன்னில் (38 பந்து, 7 பவுண்டரி, 3 சிக்சர்) வெளியேறியதும் ஆட்டம் பெங்களூரு பக்கம் திரும்பியது. எதிர்பார்க்கப்பட்ட சமாரி அட்டப்பட்டு (8 ரன்), கிரேஸ் ஹாரிஸ் (5 ரன்) ஏமாற்றம் அளித்தனர்.

20 ஓவர்களில் உ.பி. வாரியர்ஸ் அணி 8 விக்கெட்டுக்கு 175 ரன்னில் கட்டுப்படுத்தப்பட்டது. இதன் மூலம் பெங்களூரு அணி 23 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றியை வசப்படுத்தியது. 5-வது லீக்கில் ஆடிய பெங்களூருவுக்கு இது 3-வது வெற்றியாகும். உ.பி. வாரியர்ஸ் அணியின் 3-வது தோல்வி இதுவாகும்.

இத்துடன் பெங்களூரு சுற்று நிறைவடைந்தது. அடுத்தகட்ட போட்டிகள் டெல்லியில் நடக்கிறது. டெல்லியில் இன்று இரவு 7.30 மணிக்கு நடக்கும் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் மும்பை இந்தியன்ஸ் - டெல்லி கேப்பிட்டல்ஸ் அணிகள் மோதுகின்றன. ஏற்கனவே தொடக்க லீக்கில் மும்பையிடம் அடைந்த தோல்விக்கு டெல்லி பழிதீர்க்குமா? என்று ரசிகர்கள் ஆவல் கொண்டுள்ளனர்.

# முதுகு வலியோட இந்திய அணியை காப்பாற்றினார் – அஸ்வினை பாராட்டிய புஜாரா




**மும்பை : மார். 6,**

**இந்தியா மற்றும் இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் மோதும் கடைசி டெஸ்ட் போட்டி நாளை தரம்சாலாவில் தொடங்குகிறது.**

இந்தியா மற்றும் இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் மோதும் கடைசி டெஸ்ட் போட்டி நாளை தரம்சாலாவில் தொடங்குகிறது. 5 போட்டிகள் கொண்ட இந்த பெரிய தொடரில் 4 போட்டிகளின் முடிவிலேயே 3 - 1 என்ற கணக்கில் இந்திய அணி வென்றுள்ளது. இதைத் தொடர்ந்து தரம்சாலாவில் இந்தியாவின் நட்சத்திர வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் தன்னுடைய 100-வது டெஸ்ட் போட்டியில் விளையாடி சாதனை படைக்க உள்ளார்.

அஸ்வின் 100-வது டெஸ்ட் போட்டியில் விளையாட உள்ளதை முன்னிட்டு அவருக்கு வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றன. இந்நிலையில் கடந்த 2021ம் ஆண்டு சிட்னியில் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தோல்வியை சந்திக்க வேண்டிய இந்தியாவை தமது இடத்தில் விகாரியுடன் சேர்ந்து முதுகு வலியுடன் அஸ்வின் காப்பாற்றியதை பற்றி புஜாரா நினைவு கூர்ந்து பாராட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, அஸ்வின் ஒரு பேட்ஸ்மேனாகவும் விளையாடக் கூடியவர் என்பதை நாம் அறிவோம். 2021-ல் சேப்பாக்கத்தில் அவருடைய மேட்ச் வின்னிங் பேட்டிங் மற்றும் பவுலிங் போற்றப்பட வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் 2021 சிட்னி டெஸ்டில் மோசமான முதுகு வலியுடன் அவர் பேட்டிங் செய்து இந்தியாவை காப்பாற்றியது நீண்ட காலம் பேசப்படும்.

அந்தப் போட்டியில் 5-வது நாள் தோல்வியை தவிர்க்க போராடிய இந்தியாவுக்கு அவர் தேநீர் இடைவெளிக்கு பின் அவுட்டான என்னுடைய இடத்தில் பேட்டிங் செய்தார். அந்த தேநீர் இடைவேளையில் முதுகு வலியை கொண்டிருந்த அவர் தோல்வியை நினைத்து கவலைப்பட வேண்டாம் என்று என்னிடம் சொன்னது இப்போதும் நினைவிருக்கிறது.

பொதுவாக உங்களுடைய முதுகு காயத்தை சந்தித்தால் பந்துகளை அடிக்காமல் விடுவது கடினமாகும். குறிப்பாக நீங்கள் சரியாக நிற்க முடியாது என்பதால் பவுன்சர் பந்துகளை சரியாக விட முடியாது. அதே போல ஸ்பின்னர்களுக்கு எதிராக பந்தை தடுப்பது கடினமாகும். ஆனால் அவற்றையெல்லாம் தாண்டி அவரும் தசைப் பிடிப்பால் அவதிப்பட்ட விகாரியும் பார்ட்னர்ஷிப் அமைத்து நம்மை காப்பாற்றினர் என்று அவர் கூறினார்.

# தமிழகத்துக்கு எதிராக இன்னிங்ஸ் வெற்றி : 48-வது முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறி மும்பை அணி அசத்தல்



**மும்பை : மார். 6,**

**ரஞ்சிகோப்பை கிரிக்கெட் போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் தமிழக அணியை இன்னிங்ஸை மற்றும் 70 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது மும்பை அணி.**

ரஞ்சி கோப்பை கிரிக்கெட் தொடரின் அரை இறுதி ஆட்டத்தில் தமிழகம் - மும்பை அணிகள் இடையிலான ஆட்டம் மும்பை பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ் மைதானத்தில் நடைபெற்று வந்தது. இதன் முதல் இன்னிங்ஸில் தமிழக அணி 146 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. தொடர்ந்து விளையாடிய மும்பை அணி 2-வது நாள் ஆட்டத்தில் 100 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 353 ரன்கள் எடுத்தது. தனுஷ் கோட்டியன் 74, துஷார் தேஷ்பாண்டே 17 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று முன்தினம் திங்கள்கிழமை 3-வது நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய மும்பை அணி 106.5 ஓவர்களில் 378 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தது. துஷார் தேஷ்பாண்டே 27 ரன்கள் எடுத்த நிலையில் வாஷிங்டன் சுந்தர் பந்தில் ஆட்டமிழந்தார். தனுஷ் கோட்டியன் 89 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். தமிழக அணி தரப்பில் சாய்கிஷோர் 6, குல்தீப் சென் 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

232 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2-வது இன்னிங்ஸை விளையாடிய தமிழக அணி 51.5 ஓவர்களில் 162 ரன்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து தோல்வி அடைந்தது. அதிகபட்சமாக பாபா இந்திரஜித் 105 பந்துகளில், 9 பவுண்டரிகளுடன் 70 ரன்கள் சேர்த்தார். சாய் சுதர்சன் 5, நாராயண் ஜெகதீசன் 0, வாஷிங்டன் சுந்தர் 4, பிரதோஷ் ரஞ்ஜன் பால் 25, விஜய் சங்கர் 24, சாய் கிஷோர் 21, முகமது 0, அஜித் ராம் 4, சந்தீப் வாரியர் 0 ரன்களில் நடையை கட்டினர்.

மும்பை அணி தரப்பில் ஷம்ஸ் முலானி 4 விக்கெட்கள் வீழ்த்தினார். ஷர்துல் தாக்குர், மோஹித் அஸ்வதி, தனுஷ் கோட்டியன் ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக ஷர்துல் தாக்குர் தேர்வானார். அவர், முதல் இன்னிங்ஸில் 109 ரன்கள் விளாசியிருந்தார். பந்து வீச்சில் இரு இன்னிங்ஸிலும் கூட்டாக 4 விக்கெட்களை கைப்பற்றினார். இன்னிங்ஸ் மற்றும் 70 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மும்பை அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. மும்பை அணி இறுதிப் போட்டியில் கால்பதிப்பது இது 48-வது முறையாகும்.

# ஐபிஎல் தொடரை தவறவிடுகிறார் சிஎஸ்கே அணியின் தொடக்க வீரருமான டேவன் கான்வே




**வெலிங்டன் : மார். 6,**

**நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னணி வீரரும், ஐபிஎல் தொடரில் சிஎஸ்கே அணியின் தொடக்க வீரருமான டேவன் கான்வே கட்டை விரலில் ஏற்பட்டுள்ள காயத்துக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ள உள்ளார். இதனால் அவர், வரும் 22-ம் தேதி தொடங்கும் ஐபிஎல் தொடரில் பங்கேற்க முடியாத நிலை உருவாகி உள்ளது.**

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் தொடக்க பேட்ஸ்மேனான டேவன் கான்வேக்கு கடந்த மாதம் 23-ம் தேதி ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெற்ற 2-வது டி 20 கிரிக்கெட் போட்டியின் போது இடது கை கட்டை விரலில் காயம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நிறைவடைந்த முதல் டெஸ்ட் போட்டியில் டேவன் கான்வே கலந்துகொள்ளவில்லை.

இந்நிலையில் மருத்துவ பரிசோதனைகளுக்குப் பிறகு டேவன் கான்வேக்கு அறுவை சிகிச்சை செய்யக்கோரி மருத்துவர்கள் அறிவுரை வழங்கி உள்ளனர். இதைத் தொடர்ந்து இந்தவாரம் அறுவை சிகிச்சை செய்து கொள்ள முடிவு செய்துள்ளார் டேவன் கான்வே. சிகிச்சை முடிந்து மீண்டும் முழு உடற்தகுதியை எட்டுவதற்கு 8 வாரங்கள் ஆகும் என கருதப்படுகிறது. இதனால் வரும் 22-ம் தேதி தொடங்கும் ஐபிஎல் தொடரில் டேவன் கான்வே பங்கேற்க முடியாத நிலை உருவாகி உள்ளது.

கடந்த 2022-ம் ஆண்டு சென்னை சூப்பர் கிங்ஸ் (சிஎஸ்கே) அணி ரூ.1 கோடிக்கு டேவன் கான்வேவை ஏலம் எடுத்திருந்தது. இடது கை பேட்ஸ்மேனாக டேவன் கான்வே இதுவரை ஐபிஎல் தொடரில் சிஎஸ்கே அணிக்காக 23 ஆட்டங்களில் விளையாடி 46.12 சராசரி மற்றும் 141.28 ஸ்டிரைக்ரேட்டுடன் 924 ரன்கள் சேர்த்துள்ளார்.

வரும் 22-ம் தேதி தொடங்கும் ஐபிஎல் தொடரில் சிஎஸ்கே அணி தனது தொடக்க ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் அணியுடன் மோதுகிறது. ஐபிஎல் 17-வது சீசன் போட்டிகள் தொடங்க இன்னும் 17 நாட்களே உள்ள நிலையில் டேவன் கான்வே காயத்தில் சிக்கி உள்ளது சிஎஸ்கே அணிக்கு சற்று பின்னடைவை கொடுத்துள்ளது.

# ஜோஷ்வா இமை போல் காக்க திரைவிமர்சனம்



**சென்னை : மார். 6,**

**சர்வதேச போதைப்பொருள் கடத்தல் கும்பலின் தலைவனுக்கு எதிராக, அமெரிக்க கோர்ட்டில் துணிச்சலுடன் வாதாட முன்வரும் பெண் வழக்கறிஞர் ராஹேவுக்கு அந்த கும்பல் கொலை மிரட்டல் விடுக்கிறது. தற்செயலாக அவரை சென்னையில் சந்திக்கும் ஹீரோ வருண், பிறகு அவருடன் நட்பு கொண்டு, காதல் கொண்டு, தன்னுயிரை துச்சமென்று நினைத்து ராஹேவை காப்பாற்றுகிறாரா, இல்லையா என்பது படத்தின் கதை.**

கான்ட்ராக்ட் கில்லர் கேரக்டருக்கு பொருத்தமாக இருக்கிறார், வருண். காதலி ராஹேவிடம் தன்னைப் பற்றிய உண்மைகளை சொன்ன பிறகு, தன்னுடனான காதலை முறித்துக்கொண்டு வெளிநாடு செல்லும் அவரைப் பிரிய மனமின்றி தவிக்கும் காட்சியில் நன்கு நடித்துள்ளார். அவரது தோற்றம் ஆக்‌ஷன் காட்சிகளுக்கு நன்கு ஒத்துழைத்துள்ளது. ரொமான்ஸ் காட்சிகளில் இன்னும் பயிற்சி பெற வேண்டும். சற்று முதிர்ச்சியான முகம் கொண்ட ராஹே, படம் முழுக்க ஒரேமாதிரியான பாவனைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

இவர், நடிகர் ஆரவ் காதலித்து திருமணம் செய்துகொண்ட பிரபல மாடல் என்பது குறிப்பிடத்தக்கது. ஹீரோ கிருஷ்ணா திடீரென்று வில்லனாகி, கூலிப்படை ஆளாகி, வருண் தனது பழைய நண்பன் என்று தெரிந்ததும் உருகி வழிகிறார். சில காட்சிகளில் துறுதுறுப்பான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். ராஹேவின் பாதுகாப்புக்காக நியமிக்கப்படும் வருணுக்கு பல ரகசிய தகவல்களை கடத்தும் கேரக்டரில் திவ்யதர்ஷினி நடித்துள்ளார். ராஹேவின் தந்தையாக வரும் கிட்டி, தன் அனுபவ நடிப்பை வழங்கியுள்ளார்.

படம் முழுக்க லோக்கல் ஆட்களும், ஃபாரின் நபர்களும் நிரம்பி இருக்கிறார்களே தவிர, காக்கிச்சட்டை போலீஸ் ஒரு காட்சியில் கூட வரவில்லை. கவுதம்மேனன் இயக்கியுள்ளார். ஆக்‌ஷன் காட்சிகளை தனது விறுவிறுப்பான ஒளிப்பதிவின் மூலம் ஆடியன்சுக்கு கடத்துகிறார் எஸ்.ஆர்.கதிர். ஹாலிவுட் ஸ்டண்ட் மாஸ்டர் யானிக் பென் வடிவமைத்திருக்கும் சண்டைக்காட்சிகள் அசத்தலாக இருக்கின்றன. கார்த்திக் இசையில் பாடல்கள் மனதில் பதியவில்லை. தவிர பின்னணி இசையிலும் பேரிரைச்சலையே வெளிப்படுத்தியுள்ளார்.

வரலாறு சினிமா

# ‘காடுவெட்டி’ படத்துக்கு சென்சாரில் 31 கட்



**சென்னை : மார். 6,**

**ஆர்.கே.சுரேஷ் ஹீரோவாக நடித்துள்ள படம் ‘காடுவெட்டி’. சங்கீர்த்தனா, விஷ்மியா கதாநாயகிகளாக நடித்துள்ளனர். மற்றும் சுப்ரமணிய சிவா, ஆடுகளம் முருகதாஸ், ஆதிரா, சுப்பிரமணியன் உட்பட பலர் நடித்துள்ள இந்தப் படத்தை சோலை ஆறுமுகம் இயக்கியுள்ளார்.**

மஞ்சள் ஸ்கிரீன்ஸ் நிறுவனம் சார்பில் த.சுபாஷ் சந்திரபோஸ், கே.மகேந்திரன், என்.மகேந்திரன், சி.பரமசிவம், ஜி. ராமு, சோலை ஆறுமுகம் இணைந்து தயாரித்துள்ளனர். ஸ்ரீகாந்த்தேவா பின்னணி இசை அமைத்துள்ளார். வணக்கம் தமிழா சாதிக் பாடல்களுக்கு இசை அமைத்திருக்கிறார். மா.புகழேந்தி ஒளிப்பதிவு செய்துள்ள இந்தப் படம் பற்றி சோலை அறுமுகம் கூறியதாவது:

இந்தப் படத்துக்குத் தணிக்கைக் குழு 31 ‘கட்’டுகள் கொடுத்தது. ‘காடுவெட்டி’ என்ற தலைப்பை வைக்கக்கூடாது என்று சொன்ன சென்சார் போர்டிடம் எனது விளக்கத்தைக் கொடுத்தேன். காடுவெட்டி என்ற பெயருக்குப் பெரிய வரலாறு இருக்கிறது. அந்த காலத்தில் மன்னர்கள் போர் பயிற்சிக்காகக் காட்டில் ஒரு இடத்தை தேர்வு செய்து மரங்களை வெட்டி பயிற்சிக் களமாக பயன்படுத்துவார்கள். அதை போர்க்குடி மக்கள் விவசாய நிலமாக மாற்றுவார்கள். பிறகு அதை ஊர்களாக மாற்றுவார்கள். அப்போது அதற்கு காடுவெட்டி என்று பெயர் வைப்பார்கள்.

இப்படி தமிழ்நாட்டில் 11 இடங்கள் உள்ளன. ஆக காடுவெட்டி ஒரு சரித்திரம் என்று விவாதித்தேன்; இந்த தலைப்பு கிடைத்தது. காதல் என்ற காரணத்துக்காக எல்லோரையும் ஒழிக்க நினைத்தால் அது தலைமுறை தலைமுறையாக வன்முறையை சேர்க்கும். இந்தப்படம் வட மாவட்ட மக்களின் வாழ்வியலை, அரசியலை உள்ளது உள்ளபடி பேசும் என்று அவர் கூறினார்.

# 250 திரையரங்குகளில் ‘பாசிட்டிவ்’ விமர்சனங்களால் முன்னேறும் ‘மஞ்சும்மெல் பாய்ஸ்’



**சென்னை : மார். 6,**

**வெளியானபோது வெறும் தமிழகத்தில் 50 திரைகளில் மட்டுமே ஓடிக் கொண்டிருந்த ‘மஞ்சும்மெல் பாய்ஸ்’ திரைப்படம் தற்போது 250-க்கும் மேற்பட்ட திரைகளை ஆக்கிரமித்துக்கொண்டுள்ளது.**

கடந்த பிப்ரவரி 22-ம் தேதி திரையரங்குகளில் வெளியான படம் ‘மஞ்சும்மெல் பாய்ஸ்’. சிதம்பரம் எஸ் பொடுவால் இயக்கியுள்ளார். சவுபின் ஷாயிர், ஸ்ரீநாத் பாஷி, பாலு வர்கீஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ள இப்படத்துக்கு சுஷின் ஷ்யாம் இசையமைத்துள்ளார். ரூ.5 கோடி பட்ஜெட்டில் உருவானதாக கூறப்படும் இப்படம் ரூ.100 கோடி வசூலை நெருங்கி வருகிறது. இதற்கு தமிழ் ரசிகர்கள் கொடுத்த வரவேற்பும் முக்கிய காரணமாக சொல்லப்படுகிறது. ’குணா’ குகையில் நடக்கும் கதையும், இளையராஜா இசையும் தமிழ் ரசிகர்களை கவர்ந்துள்ளது.

இந்த நிலையில், படம் வெளியான பிப்.22 ஆம் ஆம் தேதியன்று தமிழகம் முழுவதும் வெறும் 50 திரைகளில் மட்டுமே ஓடிக் கொண்டிருந்த ‘மஞ்சும்மெல் பாய்ஸ்’ திரைப்படம் தற்போது சுமார் 250 திரைகளுக்கு மேல் திரையிடப்பட்டுள்ளது.

சென்னை, கோவை, திருச்சி போன்ற பெரிய நகரங்கள் மட்டுமின்றி சிறிய நகரங்களிலும் அரங்கு நிறைந்த காட்சிகளாக ஓடிக் கொண்டிருக்கிறது. பெரிய அளவில் எந்த ஒரு விளம்பரமோ, யூடியூப் நேர்காணல்களோ, பிரம்மாண்ட ஆடியோ வெளியீட்டு விழாக்களோ நடத்தாமல் முழுக்க முழுக்க பாசிட்டிவ் விமர்சனங்களால் மட்டுமே இப்படத்துக்கு வெற்றி கிடைத்துள்ளது. ஏறக்குறைய படம் பார்த்த அனைவருமே படக்குழுவினரை நெகிழ்ச்சியுடன் பாராட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

# ஃபுட்பால் ஜெர்சி அணிந்து பிறந்த நாள் கொண்டாட்டம் : மகனின் ஆசையை நிறைவேற்றிய அஜித் – ஷாலினி



**சென்னை : மார். 6,**

**மகனின் ஆசைப்படி ஃபுட்பால் ஜெர்சி அணிந்து பிறந்தநாள் கொண்டாட்டத்தை அஜித்-ஷாலினி தம்பதியர் நடத்தியுள்ளனர். இந்தப் புகைப்படங்களைத் தனது சமூகவலைதளப் பக்கத்தில் ஷாலினி பகிர்ந்துள்ளார்.**

நடிகர் அஜித்-ஷாலினி தம்பதியின் மகன் ஆத்விக் பிறந்தநாள் கடந்த மார்ச் 2-ம் தேதி கொண்டாடப்பட்டது. அந்தப் புகைப்படங்களை ஷாலினி தனது சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். ஒன்பது வயதாகும் ஆத்விக் விளையாட்டில் படுசுட்டி. குறிப்பாக கால்பந்து விளையாட்டில் ஆர்வமாக இருக்கிறார். இவரது இந்த விளையாட்டுத் திறமையை அஜித்-ஷாலினி ஊக்குவித்து வருகின்றனர்.

போட்டிகளில் ஆத்விக்கை கலந்து கொள்ள வைப்பது, பள்ளியில் அவருடைய நண்பர்களுடன் அஜித் கால்பந்து விளையாடி மகிழ்வது போன்ற புகைப்படங்கள் அவ்வப்போது இணையத்தில் வைரலாகும். சென்னை கால்பந்து கிளப்பின் ஜூனியர் அணிக்காக விளையாடி வருகிறார் ஆத்விக் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில், அவரது ஃபுட்பால் ஆர்வத்தை இன்னும் ஊக்கப்படுத்தும் வகையில் இப்போது ஆத்விக்கின் பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது தங்கநிறத்தில், கால்பந்து வடிவத்தில் உள்ள கேக் கொடுத்து மகிழ்வித்திருக்கிறார்கள். மேலும், பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக கட்டப்பட்ட கால்பந்து வடிவிலான அலங்கார பலூன்கள், பின்னணியில் ஒட்டப்பட்ட பேனரில் கால்பந்து வீரர்களான ரொனால்டினோ, டேவிக் பெக்காம் நடுவில் ஆத்விக் இருக்கும் வகையில் போஸ்டரை டிசைன் செய்துள்ளனர்.

இப்படி ஃபுட்பால் தீமில் ஆத்விக்கின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு திட்டமிட்டு மகிழ்ச்சிப்படுத்தி இருக்கிறார்கள் அஜித்-ஷாலினி. ரசிகர்களும் ஆத்விக்கிற்கு தங்களது பிறந்தநாள் வாழ்த்துகளைச் சொல்லி வருகின்றனர்.

வரலாறு உலகம்

# இந்தோனேசியாவின் பாலி தீவில் முதல் இந்து அரசு பல்கலைக்கழகம்

## அதிபர் ஜோகோவி விடோடோ ஒப்புதல்



**ஜகார்த்தா : மார். 6,**

**இந்தோனேசியாவின் பாலி தீவில் செயல்பட்டு வரும் இந்து தர்ம அரசு கல்வி நிறுவனத்தை பல்கலைக்கழக அந்தஸ்துக்கு உயர்த்தி அதிபர்ஜோகோவிவிடோடோ ஆணையிட்டுள்ளார்.**

இந்தோனேசியாவில் இஸ்லாமியர்கள் அதிகம் வசிக்கின்றனர். எனினும், அதன் கட்டுப்பாட்டில் உள்ள பாலி தீவில் பெரும்பான்மையாக இந்துக்கள் வாழ்கின்றனர். உலகளவில் சுற்றுலாமையமாக விளங்கும் இந்த பாலித்தீவில் கடந்த 1993-ம் ஆண்டு இந்து மத ஆசிரியர்களால் கல்வி நிறுவனம் தொடங்கப்பட்டது. அதன்பின்னர் கடந்த 1999-ம்ஆண்டு இந்து மத அரசு கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டது. பாலிதீவின் தலைநகர் டென்பசாரில் மிகச் சிறப்பாக செயல்பட்டு வந்த இந்தக் கல்லூரி கடந்த 2004-ம் ஆண்டு இந்து தர்ம அரசு நிறுவனமாக (ஐஎச்டிஎன்) மீண்டும் தரம் உயர்த்தப்பட்டது.

இந்நிலையில், இந்நிறுவனத்துக்கு பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கும் ஆணையில் அதிபர் ஜோகோவி விடோடோ கையெழுத்திட்டுள்ளார். அதன்படி, இந்தோனேசியாவின் முதல் இந்துப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. அதிபரின் ஒழுங்குமுறை அதிகாரத்தின் கீழ் இந்தப் பல்கலை. உருவாக்கப்பட்டுள்ளது.

புதிய இந்து பல்கலைக் கழகத்துக்கு 'ஐ கஸ்தி பகஸ் சுக்ரிவா ஸ்டேட் இந்து யுனிவர்சிட்டி (யுஎச்என்)' என்று பெயர்சூட்டப்பட்டுள்ளது. இந்தப் பல்கலைக்கழகம் இந்து உயர் கல்விக்கான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி செயல்படும்.

இதன் மூலம் ஐஎச்டிஎன் நிறுவனத்தில் படிக்கும் மாணவர்கள் உடனடியாக யுஎச்என் மாணவர்களாக மாற்றப்படுவார்கள். ஐஎச்டிஎன் நிறுவனத்தின் சொத்துகள், ஊழியர்கள் உட்பட அனைத்தும் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் என்று அதிபரின் ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இஸ்ரேல் எல்லையில் உள்ள இந்தியர்கள்

## பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல இந்திய தூதரகம் அறிவுரை



**புதுடெல்லி : மார். 6,**

**இஸ்ரேல் - ஹமாஸ் போர் தொடங்கிய பின்னர் முதன்முறையாக இந்தியர் ஒருவர் கொல்லப்பட்ட நிலையில், அங்குள்ள இந்தியர்கள் பத்திரமாக இருக்கும்படி தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.**

இது தொடர்பாக இந்தியத் தூதரகம் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "தற்போது நிலவும் பாதுகாப்பற்ற நிலவரத்தைக் கருத்தில் கொண்டு, இஸ்ரேலில்உள்ள அனைத்து இந்தியர்களும் குறிப்பாக வடக்கு, தெற்கு எல்லைகளை ஒட்டிய பகுதிகளில் வேலை செய்யும் இந்தியர்கள் இஸ்ரேலின் பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்ல அறிவுறுத்தப்படுகிறார்கள்" என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், +972-3522 6748 என்ற ஹெல்ப்லைன் எண்ணும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது 24 மணி நேரமும் செயல்படக் கூடிய ஹெல்ப்லைன் எண்ணாகும். அதேபோல், cons1.telaviv@mea.gov.in என்ற இமெயில் முகவரியும் கொடுக்கப்பட்டுள்ளது.

அக்டோபர் 7, 2023-ஆம் ஆண்டு இஸ்ரேல் - காசா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே தொடங்கிய போர் இன்னும் நீடித்து வருகிறது. இருதரப்பு போரை நிறுத்தக்கோரி பல்வேறு நாட்டுத் தலைவர்களும் கோரிக்கை வைத்து வருகின்றனர். இருப்பினும் இன்னும் காசாவில் போர் ஓய்ந்தபாடில்லை. காசாவின் மக்கள்தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் இப்போது பஞ்சத்தின் ஆபத்தில் இருப்பதாகவும், மருந்துகளின் பற்றாக்குறை மற்றும் மருத்துவ பராமரிப்பு பற்றாக்குறையால் தொற்று நோய்களின் பாதிப்பு அதிகரித்துள்ளதாக ஐ.நா எச்சரித்துள்ளது.

இந்நிலையில், வடக்கு இஸ்ரேலின் மார்காலியோட் பகுதியில் ஒரு விவசாய நிலப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை காலை 11 மணியளவில் ஏவுகணைத் தாக்குதல் நடந்துள்ளது. இதில் இந்தியர் ஒருவர் உயிரிழந்தார். இருவர் காயமடைந்தனர்.

உயிரிழந்தவர் கேரள மாநிலம் கொல்லம் பகுதியைச் சேர்ந்த பத்னிபின் மேக்ஸ்வெல் என்று அடையாளம் தெரிய வந்துள்ளது. இஸ்ரேலின் ஜிவ் மருத்துவமனையில் அவரது உடல் வைக்கப்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் புஷ் ஜோசப்ஜார்ஜ், பால்மெல்வின் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

புஷ் ஜோசப் ஜார்ஜ் முகத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக சிகிச்சை பெற்று தேறிவருவதாக மருத்துவமனை வட்டாரம் தெரிவித்துள்ளது. அவர் இந்தியாவில் உள்ள அவரது குடும்பத்தாருடன் தொலைபேசியில் பேசிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மெல்வின் லேசான காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தைச் சேர்ந்தவராவார்.

இந்தத் தாக்குதலை லெபனானைச்சேர்ந்த ஷைட் ஹெஸ்புல்லா அமைப்பு மேற்கொண்டுள்ளது. இந்த அமைப்பானது கடந்த அக்டோபர் 8-ஆம் தேதி முதல் ஹமாஸுக்கு ஆதரவாக அவ்வப்போது இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் முதல் இடத்தை இழந்த எலான் மஸ்க்



**அமெரிக்கா : மார். 6,**

**உலகின் பெரும் பணக்காரர் பட்டத்தை இழந்திருக்கும் எலான் மஸ்க், அமேசான் நிறுவனர் ஜெஃப் பெசோஸிடம் அதனை பறிகொடுத்திருக்கிறார்.**

ப்ளூம்பெர்க் பில்லியனர்கள் குறியீட்டின் அடிப்படையில் அமேசானின் ஜெஃப் பெசோஸ், உலகின் பெரும் பணக்காரர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார். அந்த இடத்திலிருந்த எலான் மஸ்க் இரண்டாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். சுமார் 197.70 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான சொத்துக்களுடன் எலான் மஸ்க் பின்தங்க, 200.30 பில்லியன் டாலர் சொத்துக்களுடன் ஜெஃப் பெசோஸ் முதலிடத்துக்கு முன்னேறி உள்ளார்.

ஜெஃப் பெசோஸின் அமேசான் மற்றும் எலான் மஸ்கின் டெஸ்லா என இருவரது பங்குகளும் அண்மைக்காலமாக எதிரெதிர் திசையில் போக்கு காட்டி வருகின்றன. இது இருவருக்கும் இடையிலான சொத்து மதிப்பின் வித்தியாசத்தை அதிகரிக்கவும் செய்து வந்தது. இரண்டும் அமெரிக்க பங்குச் சந்தைகளைத் தூண்டும் முன்னணி பங்குகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளன. எனினும், அமேசான் பங்குகள் 2022 பிற்பகுதியில் தொடங்கி, இரு மடங்கிற்கும் மேலாக உயர்ந்துள்ளன. மாறாக எலான் மஸ்கின் டெஸ்லா அதன் 2021 உச்சத்திலிருந்து பெருமளவுக்கு கீழே சரிந்தது.

எலான் மஸ்கை பொறுத்தளவில் அவரது டெஸ்லா கார் நிறுவனத்தின் ஷாங்காய் தொழிற்சாலைகள், அதன் ஏற்றுமதி அளவில் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக சரிவை கண்டு வருகின்றன. இதன் போக்கு அதிகரித்ததில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை டெஸ்லா பங்குகள் கடும் வீழ்ச்சி அடைந்தன. இது எலான் மஸ்க் சொத்துக்களின் நிகர மதிப்பை பாதிக்க, உலகப் பணக்காரர் பட்டியலில் முதலிடத்தில் இருந்து எலான் மஸ்க் சரிய நேர்ந்திருக்கிறார்.

மாறாக, கொரோனா பெருந்தொற்று காலம் முதலே, அமேசானின் ஆன்லைன் விற்பனை ஏறுமுகம் கண்டிருக்கிறது. ஊரடங்கு மற்றும் வீடடங்கு காலம், வாடிக்கையாளர் மத்தியில் அமேசான் ஆன்லைன் வர்த்தகத்தை பரவலாக எடுத்துச் சென்றதில், ஜெஃப் பேசோஸ் தனக்கான புதிய சந்தையை தக்க வைத்துள்ளார். இதன் மூலம் 60 வயதாகும் பெசோஸ், 2021க்குப் பிறகு ப்ளூம்பெர்க்கின் பணக்காரர்களின் தரவரிசையில் முதலிடம் பிடித்ததுள்ளார். உலகப் பணக்காரர்கள் என்னும் பரமபதத்தில் தற்போது சரிவு கண்டிருக்கும் 52 வயது எலான் மஸ்க், விரைவில் முதலிடத்துக்கு முன்னேறக் காத்திருக்கிறார்.

# உயர்பதவிக்கு போட்டியிடும் ஒருவரை தடை செய்ய முடியாது

## அதிபர் தேர்தலில் ட்ரம்ப் போட்டியிட அமெரிக்க உச்சநீதிமன்றம் அனுமதி



**வாஷிங்டன் : மார். 6,**

**அதிபர் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் போட்டியிட அமெரிக்க உச்சநீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.**

2020ம் ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளர் ஜோபிடனிடம் குடியரசு கட்சி வேட்பாளரும் அப்போதைய அதிபருமான ட்ரம்ப் தோல்வியடைந்தார். ஆனால் தோல்வியை ஏற்க மறுத்த அவர், வாக்கு எண்ணிக்கையில் முறைகேடு நடைபெற்றதாக குற்றம் சாட்டினார். அவரது ஆதரவாளர்கள் 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் 6ம் தேதி அமெரிக்க நாடாளுமன்றத்திற்குள் நுழைந்து, போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் உயிரிழந்தனர். அமெரிக்க அரசியல் சாசனத்தின் 14வது திருத்தத்தின்படி நாட்டிற்கு எதிராக போராடியதாக ட்ரம்ப் ஆதரவாளர்கள் மீதும் கிளர்ச்சியை தூண்டியதாக அவர் மீதும் வழக்கு தொடரப்பட்டது.

இதனை விசாரித்த கொலராடோ நீதிமன்றம், ட்ரம்ப் குற்றவாளி என்று தீர்ப்பளித்ததுடன் அவரது பெயரை வேட்பாளர் பட்டியலில் இருந்தும் நீக்க கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் உத்தரவிட்டது. இது ட்ரம்பிற்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்திய நிலையில், தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இதனை விசாரித்த 9 நீதிபதிகள் கொண்ட அமர்வு, நாட்டின் உயர்பதவிக்கு போட்டியிடும் ஒருவரை மாநில நீதிமன்றம் தடை செய்ய முடியாது என்றும் ஒருமனதாக தீர்ப்பளித்தது. அரசியல் சாசனம் 14வது சட்டத் திருத்தம் இதற்கு பொருந்தாது என்று குறிப்பிட்ட நீதிபதிகள், கொலராடோ வாக்குப்பதிவில் இருந்து ட்ரம்பின் பெயரை நீக்கியதையும் ரத்து செய்தனர். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு அமெரிக்காவுக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்று ட்ரம்ப் குறிப்பிட்டார். ட்ரம்ப் பெயரை வேட்பாளர் பட்டியலில் சேர்க்க தடை விதித்த நீதிமன்ற உத்தரவுகள் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

# அரசியலமைப்பில் கருக்கலைப்பு உரிமை

## பிரான்ஸ் நாட்டில் மசோதா நிறைவேற்றம்



**பாரிஸ் : மார். 6,**

**பிரான்ஸ் நாட்டில் கருக்கலைப்பை பெண்களின் அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கும் சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசியலமைப்பில் கருக்கலைப்பு உரிமைகளை வெளிப்படையாகப் பதிவு செய்த முதல் நாடு ஆகியுள்ளது பிரான்ஸ்.**

நேற்று முன்தினம் திங்கள்கிழமை அன்று பிரான்ஸ் நாடாளுமன்ற மேலவையில் நடைபெற்ற சிறப்பு அமர்வில் இதற்கு ஆதரவாக 780 உறுப்பினர்களும், எதிராக 72 உறுப்பினர்களும் வாக்களித்தனர். மொத்த உறுப்பினர்களில் ஐந்தில் மூன்று பங்கினர் அல்லது 512 உறுப்பினர்கள் ஆதரவு இதற்கு தேவையானதாக இருந்தது. இந்நிலையில், 780 பேர் இதற்கு ஆதரவாக வாக்களித்த காரணத்தால் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

முக்கியத்துவம் வாய்ந்த சட்டங்களுக்கு பாரம்பரிய முறைப்படி 'சீலிங் செரிமனி' விழா அந்த நாட்டில் நடத்தப்படும். அந்த வகையில் இதற்கு வரும் மகளிர் தினத்தன்று (வெள்ளிக்கிழமை) சீலிங் செரிமனி நடைபெறும் என அந்நாட்டு அதிபர் இம்மானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

"நாட்டின் மகளிர் அனைவருக்கும் நாங்கள் ஒரு செய்தி சொல்கிறோம். உங்கள் உடல் உங்களுக்கு சொந்தம். அதில் யாரும் எந்த முடிவும் செய்ய முடியாது" என அந்நாட்டு பிரதமர் கேப்ரியல் அட்டல் தெரிவித்தார். இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டத்தை பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் திரளான மக்கள் கொண்டாடினர். இதில் பெண்களும் இருந்தனர். உற்சாக மிகுதியில் பாடல் பாடியும் கவனம் ஈர்த்தனர்.

பிரான்ஸ் நாட்டில் கடந்த 1975 முதல் கருக்கலைப்பு குற்றமற்றதாக கருதப்படுகிறது. கருவுற்ற பெண்கள் 14-வது வாரம் வரை கருக்கலைப்பு செய்யலாம் என்பது சட்டப்பூர்வமானது. இந்த சட்ட திருத்தம் அதில் எதையும் மாற்றாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் நெடுஞ்சாலை அருகே விழுந்து தீப்பிடித்த விமான விபத்தில் 5 பேர் பலி




**வாஷிங்டன் : மார். 6,**

**விமானத்தை அவசரமாக தரையிறக்க அனுமதி கிடைத்தபோதிலும், விமான நிலையத்தை நெருங்குவதற்குள் விபத்துக்குள்ளானது.**

அமெரிக்காவின் டென்னசி மாநிலம், நாஷ்வில்லியில் நெடுஞ்சாலை அருகே இன்று சிறிய விமானம் ஒன்று விபத்துக்குள்ளானது. தரையில் விழுந்த வேகத்தில் விமானம் தீப்பற்றி எரிந்தது. விமானத்தில் இருந்த 5 பேரும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

நாஷ்வில்லி பெருநகர காவல்துறை தனது எக்ஸ் பக்கத்தில், விமான விபத்து குறித்த செய்தியை புகைப்படத்துடன் பதிவிட்டுள்ளது. விமானம் நடுவானில் பறந்துகொண்டிருந்தபோது என்ஜினில் கோளாறு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து ஜான் சி டியூன் விமான நிலையத்தில் விமானத்தை அவசரமாக தரையிறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், என்ஜின் செயலிழந்ததால் விமான நிலையத்தை நெருங்குவதற்குள், விமானம் விழுந்து விபத்துக்குள்ளானது.

இவ்விபத்து தொடர்பாக மத்திய விமான போக்குவரத்து நிர்வாகம் மற்றும் தேசிய போக்குவரத்து பாதுகாப்பு வாரியம் விசாரணை நடத்தி வருவதாக காவல்துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

# இந்திய படைகளை வெளியேற்றிவிட்டு சீனாவிடம் இருந்து இலவசமாக ராணுவ உதவி பெறும் மாலத்தீவு



**மாலி : மார். 6,**

**மாலத்தீவில் உள்ள இந்திய வீரர்களில் முதல் குழுவினர் வரும் 10-ம் தேதிக்குள் வெளியேற கெடு விதிக்கப்பட்டுள்ளது.**

இந்தியாவை வெளியேற்றுவோம் என்ற முழக்கத்துடன் மாலத்தீவு அதிபரான முய்சு, சீனாவுடன் நெருக்கம் காட்டுகிறார். சீனாவுடனான உறவை பலப்படுத்தும் வகையில் பல்வேறு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளார். இதனால் இந்தியா-மாலத்தீவு இடையே உரசல் ஏற்பட்டுள்ளது.

மாலத்தீவில் உள்ள மூன்று விமான தளங்களை இந்திய ராணுவம் நிர்வகித்து வந்தது. அங்கு இந்திய ராணுவ வீரர்கள் 88 பேர் பணியமர்த்தப்பட்டிருந்தனர். அவர்கள், இரண்டு ஹெலிகாப்டர்கள் மற்றும் ஒரு டோர்னியர் விமானத்தைப் பயன்படுத்தி, கடந்த சில ஆண்டுகளாக மாலத்தீவு மக்களுக்கு மருத்துவ தேவைகளுக்கான போக்குவரத்து வசதிகளை வழங்கி வந்தனர்.

முய்சு பதவியேற்றபின் இந்திய படைகளை வெளியேற்ற முடிவு செய்தார். இதுதொடர்பாக இரு தரப்பிலும் உயர்மட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அதன்பின்னர் நாடாளுமன்றத்தில் பேசிய முய்சு, ஒரு விமான தளத்தில் இருந்து இந்திய வீரர்கள் 2024 மார்ச் 10-ம் தேதிக்குள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும், மீதமுள்ள இரண்டு விமான தளங்களில் இருக்கும் வீரர்கள் 2024 மே 10-ம் தேதிக்குள் அனுப்பப்படுவார்கள் என்றும் அறிவித்தார்.

இந்திய ராணுவத்தின் முதல் குழுவை வெளியேற்றுவதற்கான கெடு இன்னும் ஐந்து நாட்களில் முடிய உள்ள நிலையில், அந்த வீரர்களுக்கு பதிலாக பணியாற்றக்கூடிய இந்திய தொழில்நுட்ப குழு மாலத்தீவு வந்துள்ளது. அவர்கள் விமான தளத்தின் பொறுப்பை ஏற்றதும் அந்த தளத்தில் உள்ள இந்திய வீரர்கள் நாடு திரும்ப உள்ளனர். ஒருபுறம் இந்திய வீரர்களை வெளியேற்றுவதற்கு கெடு விதிக்கப்பட்டுள்ள நிலையில், மறுபுறம் சீனாவிடம் இருந்து இலவசமாக ராணுவ உதவிகளை பெறும் வகையில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை ராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

சீனாவின் ராணுவ உதவியை இலவசமாக வழங்குவது மற்றும் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் வகையிலான இந்த ஒப்பந்தத்தில், மாலத்தீவு பாதுகாப்புத்துறை மந்திரி முகமது காசன் மவுமூன், சீனாவின் சர்வதேச ராணுவ ஒத்துழைப்பு அலுவலக துணை இயக்குனர் மேஜர் ஜெனரல் ஜாங் பாவ்கன் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளதாக மாலத்தீவு பாதுகாப்புத்துறை அமைச்சகம் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளது. ஆனால் ஒப்பந்தத்தில் உள்ள அம்சங்கள் குறித்த விவரங்கள் வெளியிடப்படவில்லை. சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத 12 ஆம்புலன்ஸ்களை மாலத்தீவுக்கு சீன அரசாங்கம் பரிசாக வழங்கியுள்ளதாகவும் ஒரு செய்தி வெளியாகி உள்ளது.

# "இந்திய தொழிலாளர்களிடம் பாகுபாட்டை வளர்க்கவில்லை" : வருத்தம் தெரிவித்த அமைச்சர்



**தைவான் : மார். 6,**

**கிழக்கு ஆசியாவில் உள்ள நாடு, தைவான். இதன் தலைநகரம் தைபே. தைவான் நாட்டின் தொழிலாளர் துறை அமைச்சர், சூ மிங் சுன், சில தினங்களுக்கு முன் அந்நாட்டில் பல்வேறு துறைகளில் நிலவும் தொழிலாளர் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் வெளிநாடுகளிலிருந்து ஊழியர்கள் வருவதை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் குறித்து பேட்டியளித்தார்.**

அந்த பேட்டியில் மிங் சுன் தெரிவித்ததாவது: தைவான் தொழிலாளர் துறை, வடகிழக்கு இந்திய மக்களை பணியில் அமர்த்த முன்னுரிமை வழங்க உள்ளது. ஏனென்றால் அவர்களின் தோற்றம், தோல் நிறம், உணவு பழக்கவழக்கங்களும் தைவான் நாட்டு மக்களுடன் பெருமளவு ஒத்து போகிறது. மேலும், இப்பகுதியில் உள்ள மக்கள் (பெரும்பாலும் கிறித்துவர்கள்) கட்டுமானத்துறை, உற்பத்தித் துறை, விவசாயம் உள்ளிட்டவைகளில் திறன் வாய்ந்தவர்களாக இருக்கின்றனர் என்று மிங் சுன் தெரிவித்தார்.

பாகுபாடுகளை வளர்க்கும் விதமாக மிங் சுன் கூறிய கருத்துகள் உள்ளதாக இந்தியாவில் அவரது பேச்சிற்கு எதிராக கண்டனங்கள் வலுத்தது. இதை தொடர்ந்து, நேற்று அமைச்சர் மிங் சுன், "இந்திய பணியாளர்களின் திறமையை மேம்படுத்தி நான் பேச முற்பட்டது, தவறுதலாக புரிந்து கொள்ளப்பட்டு விட்டது. தவறாக புரிந்து கொள்ளப்பட்ட என் கருத்துகளுக்கு நான் வருத்தம் தெரிவிக்கிறேன். உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு பணியாளர்கள் அனைவருக்கும் இடையே எந்தவித பாகுபாடுகளும் இல்லாத வகையில்தான் தைவானின் தொழிலாளர் நலசட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன," என தெரிவித்தார்.

தைவானின் தொழிலாளர் துறை மற்றும் வெளியுறவுத் துறை, முன்னரே அமைச்சரின் பேச்சிற்கு வருத்தம் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. இந்தியர்களை பணியில் அமர்த்தும் ஒரு நாடு, இந்திய மாநிலங்களில் ஒரு சில பகுதிகளை குறிப்பிட்டு முன்னுரிமை வழங்க உள்ளதாக கூறியது இதுவே முதல்முறை.

# பிலிப்பைன்சில் அரிசி விலை உயர்வு மக்கள் போராட்டம்

**மணிலா : மார். 6,**

**பிலிப்பைன்சில் வரலாறு காணாத அளவில் அரிசி விலை உயர்ந்துள்ளது.**



பிலிப்பைன்சில் சமீபகாலமாக அத்தியாவசிய பொருட்களின் விலை தாறுமாறாக உயர்ந்து வருகிறது. குறிப்பாக கடந்த டிசம்பருடன் ஒப்பிடுகையில் பணவீக்கம் உயர்ந்து 22.6 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இதனால் அரிசி விலை இதுவரை இல்லாத புதிய உச்சத்தை எட்டியுள்ளது. இதற்கு அரசின் கையிருப்பில் உள்ள அரிசியை சட்ட விரோதமாக விற்பனை செய்ததே காரணம் என குற்றம் சாட்டப்படுகிறது. இதற்கிடையே அரிசி விலையை குறைக்க கோரி பொதுமக்கள் போராட்டத்தில் குதித்தனர்.

எனவே வேளாண் துறை அதிகாரிகளிடம் இதுகுறித்து விசாரணை தொடங்கப்பட்டது. இந்தநிலையில் அரிசி விற்பனை ஊழல் தொடர்பாக தேசிய உணவு ஆணையத்தின் தலைவர், அதிகாரிகள் உள்பட 138 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர். மேலும் இதுதொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்பட்டு வருவதாக வேளாண்துறை மந்திரி பிரான்சிஸ்கோ டியு லாரல் கூறினார்.

# ஜெயலலிதாவின் தங்கம், வெள்ளி நகைகளை தமிழ்நாடு அரசிடம் ஒப்படைக்க தடை





# இஸ்ரேல் எல்லையில் உள்ள இந்தியர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல இந்திய தூதரகம் அறிவுரை

# மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு சத்தமின்றி பூமி பூஜையுடன் தொடங்கிய பணிகள்




| சென்னை / புதுக்கோட்டை | 06.03.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை

வரலாறு

நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

அன்புமணி , ஈழத்து எழுத்தாளர் (பி.1935) (இ.2014)



சி. வி. விசுவேசுவரா , இந்திய வானியலாளர் (பி.1938) (இ.2017)



கரு பழனியப்பன் , தமிழகத் திரைப்பட இயக்குநர் (பி.1972)



## இன்றைய நினைவு நாள்

எஸ். ஆறுமுகம் , ஈழத்துப் பொறியியலாளர், எழுத்தாளர் (பி.1905) (இ.2000)



சி. ஜேசுதாசன் , தமிழக இலக்கிய வரலாற்றாசிரியர் (பி.1919) (இ.2002)



சோ. அழகர்சாமி , தமிழக அரசியல்வாதி (பி.1926) (இ.2009)



ராம் சுந்தர் தாசு , பீகாரின் 18-வது முதலமைச்சர் (பி.1921) (இ.2015)

